# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஏப்ரல் 2000 ஜீவியம் 5 மலர் 12

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| மனித சுபாவம் | 2 |
| லைப் டிவைன் | 14 |
| இம்மாதச் செய்தி | 24 |
| செயல்படும் அன்னை சக்தி | 25 |
| சாவித்ரி | 27 |
| அஜெண்டா | 29 |
| பகவானுடைய இதர நூல்கள் | 31 |
| லைப் டிவைன் - கருத்து | 33 |
| புது மில்லனியத்தில் (Millennium) புதைந்துள்ள பொக்கிஷங்கள் | 35 |
| அன்பர் கடிதம் | 40 |
| அன்பர் அனுபவம் | 42 |
| ஸ்ரீ அரவிந்தரின் கருணை | 51 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 60 |

❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருட சந்தா ரூ.60/-**

# மனித சுபாவம் III

கர்மயோகி

**கேட்டது கிடைப்பதில்லை. கேட்காதது கிடைப்ப துண்டு. நேரு தம் மகளுக்குப் பதவியை நாடவில்லை. இந்திரா தம் மகனைப் பிரதமராக்க விரும்பினார். உன் திறமைகளைப் போற்று. கேட்காமலிருக்கக் கற்றுக் கொள். பெரியது உன்னை நாடி வரும்.**

❊ ❊ ❊

நான் கேட்டனவெல்லாம் கிடைத்தன என்பவர் வெற்றி மேல் வெற்றி பெற்றவர். அவரும் கேட்காமலிருக்கப் பழகினால், அளவு கடந்த பெரியது அவரை நாடி வரும். கேட்காதது அனைவருக்கும் கிடைப்பதில்லை. அது கிடைக்கிறது எனில் அவர் உத்தமர்களில் உயர்ந்தவர். காமராஜைத் தேடி முதல்வர் பதவியும், பிரதமர் பதவியும் வந்தன. SSLC பாஸ் செய்யமுடியாது என்றவருக்கு வலிய சந்தர்ப்பம் M.A.யைப் பெற்றுக் கொடுத்தது. எட்டு வகுப்பு படித்த மாப்பிள்ளை கிடைக்குமா என்றிருந்தவருக்குப் பட்டம் பெற்றவரை வாழ்வு திணித்தது. ஒரே துணியுடன் வாழ்வை நடத்தியவருக்கு 50 டிரஸ்ஸும், நகைகளும் கேட்காமலேயே வந்தன.

திறமைகளையும், கடமைகளையும் போற்றினால், பெரியது உன்னை நாடும். அன்பிற்கு ஏங்கி மனம் கருகியவருக்கு, அளவுகடந்த பக்தி தன்னை அர்ப்பணம் செய்ய முன் வந்தது. தாய்ப்பாசம் பெறாத குழந்தை யைப் பத்துபேர் அளவு கடந்த அன்போடு வளர்க்க முன் வந்ததுண்டு.

**வாழ்க்கையில் முன்னேறியவுடன், ''இது போதும்" என்று முதலில் தோன்றும். குறைந்தபட்சம் மேலும் ஒரு படி முன்னேற முயலவேண்டும்.**

❊ ❊ ❊

**வாழ்க்கையில் முன்னேற முடியாது என்பது உண்மை.**



**வாழ்வு முன்னேற்ற வாய்ப்பால் நிறைந்துள்ளது என்பதும் உண்மை.**

**அனைவரும் முன்னேற விரும்புகின்றனர்.**

**ஒரு சிலரே முன்னேறுகின்றனர்.**

**ஒருபடி முன்னேறியவுடன், போதும் என்பவரே பெரும்பான்மையினர்.**

**தொடர்ந்த முன்னேற்றத்தை நாடுபவர் அரிது.**

இவை நாம் அறிந்த உண்மைகள். இவற்றின் உட்கருத்தென்ன? முன்னேற்றம் எனில் அயராத உழைப்புத் தேவை. மனிதன் உயர்ந்த திற்கு ஆசைப்பட்டாலும், உழைக்கத் தயங்குகிறான். எனவே ஒரு படி உயர்ந்தவுடன் "போதும், போதும், பேராசைப்படக்கூடாது" என்று நிறுத்திக் கொள்கிறான். உழைக்கத் தயாரில்லாத சோம்பேறி உயர்ந்த இலட்சியத்தைச் சாக்காகக் காட்டி, தன் முன்னேற்றத்தைத் தடை செய்து கொள்கிறான்.

தம் சொத்தையெல்லாம் (risk) ரிஸ்க் செய்து வெற்றி பெற்றவர் போதுமான செல்வம் பெற்றபின் ரிஸ்க் எடுப்பதை நிறுத்தி விடுகிறார். நாட்டில் 6வது பணக்காரர் 100 வருஷமாகச் செல்வர் குடும்பத்தைச் சேர்ந்தவர். 70ஆம் வயதில் இளம் பிள்ளைபோல் ரிஸ்க் எடுக்க முன் வருகிறார். சுமார் 3000 கோடிக்குச் சொத்துண்டு. அவர் மகனுக்கு 50 வயது. 70ஆம் வயதில் தகப்பனார் துள்ளும் சிறு வய தினர் போலிருக்கும்பொழுது 50ஆம் வயதில் (pessimistic) எதையும் நம்பாமல், எந்த ரிஸ்க்கும் எடுக்காமல் கட்டுப்பெட்டிபோல், "எதுவும் வேண்டாம்" என்ற மனநிலையிலிருக்கிறார். திறமையுடையவருக்கும் முதலில் உள்ள ஆர்வம் முதல் வெற்றிக்குப் பின் இருப்பதில்லை.

**உனக்கு உதவுபவர்க்கு நன்றி சொல்லக் கற்றுக் கொள். மனதால் நன்றியைத் தெரிவிப்பது நல்லது.**

❊ ❊ ❊

உதட்டால் நன்றியைப் பெரும்பாலோர் சொல்ல முடியும். சிலரால் அதுவும் முடியாது. கூடவேயிருந்து ஒவ்வொரு முறையும் 'நன்றி

சொல்' எனச் சொல்லிக்கொடுத்தாலும் ஒரு சிலருக்கு அது வாராது. தம்மை நல்லவர் என முழுமையாக நம்புபவர், பிறர் செய்யும் உதவிக்கு மனதால் நன்றி சொல்ல முயன்றால், அது எவ்வளவு கடினமானது எனத் தெரியும். சந்தர்ப்பமில்லாமல், அவசியமில்லாமல், 1500 சம்பள முள்ளவர்க்கு 50,000 ரூபாயை இனாமாகக் கையில் கொடுத்த பொழுது அவர் வாயாலும் நன்றி சொல்லவில்லை, எழுத்தாலும் நன்றி சொல்லவில்லை. அதன்பின் கொடுத்தவர், பெற்றவரைப் பத்து முறை சந்தித்துவிட்டார். ஒரு முறையும் அந்த நிகழ்ச்சியே பேச்சில் எழவில்லை! உத்தமப் புருஷர்களில் தலை சிறந்தவர் எனத் தம்மைப் பற்றி நினைப்பவர் இவர். பிறர் பலரும் தமக்கு நன்றியறிதலோடில்லை என வாய் ஓயாமல் பேசுபவர்.

நன்றியுணர்வு இயல்பாக மனிதனுக்கில்லை. வாயால் சொல்வதே சிறப்பு. மனத்தால் நன்றியை நினைத்தால், அவன் மனிதனில் உயர்ந்தவனாவான்.

**எவரிடமிருந்து உதவியை எதிர்பார்க்கின்றாயோ, அவரிடமே உன் கர்வத்தைக் காட்டப் பிரியப்படுவாய் எனில், இந்தக் குணத்தை முயன்று விலக்குதல், உனக்கு முன்னேற்றத்தை அளிக்கும்.**

❊ ❊ ❊

திருமணத்தைச் சாங்கியமாகவோ, சடங்காகவோ, விழாவாகவோ செய்யக்கூடாது என்ற கொள்கையால், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும், பார்த்தபொழுது தெரிவித்துவிட்டு, எவரையும் அழைக்காமல், பத்திரிகை அச்சடிக்காமல், சொற்பொழிவில்லாமல், புரோகிதம் இல்லாமல் ஒருவர் திருமணம் செய்து கொண்டார். இத்தனையும் தெரிந்தும், தம்மை அழைக்கவில்லை என லேசாக அறிமுகமான நண்பர் மனதில் குறைப்பட்டுக் கொண்டு வெளியில் சொல்லாமலிருந்தார். திருமணமான நண்பரைப் பிறகு பார்த்தார். ஆறு மாதம் கழித்து அவருக்குத் திருமணம் வந்தது. கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. வேறு வழியில்லாமல் தம்மை அழைக்காத



வரிடம் வந்து "திருமணச் செலவுக்குக் கொஞ்சம் உதவி வேண்டும்" என்று கேட்டுப் பெற்றார். திருமணம் வந்தது. இவர் ஏராளமான பேரை அழைத்து பெரிய விழாவாகத் திருமணத்தை நடத்தினார். தம்மை அழைக்காத நண்பரை மட்டும் அழைக்கவில்லை. அவரிடம் பண உதவி 10 நாள் முன் கேட்டு வாங்கியது மறந்துவிட்டது. தம்மை அழைக்காதவரை, தாம் அழைக்காதது சரி. அவரிடமே போய் உதவி கேட்டது எப்படிச் சரி? இப்படிப்பட்டவருக்கு எவரும் ஒரு முறைக்கு மேல் உதவமாட்டார்கள். வருஷா வருஷம் காய்க்கும் மாமரத்தை ஒரு வருஷத்திற்கு மேல் காய்க்காமல் செய்வதுபோல் இவர்கள் நடந்து விடுவார்கள். பேனாவைப் பல வருஷம் உபயோகப் படுத்தலாம். ஒரு முறையோடு அது உதவாமல் போய்விடும். T.V. யை ஒரு முறைக்கு மேல் பயன்படுத்த முடியாது. ஷர்ட்டை ஒரு முறையே போட முடியும் என்றால், வாழ்க்கை எப்படிச் சுருங்குமோ, அப்படி இவர்கள் வாழ்வு சுருங்கும். அமுதசுரபியானது அன்னை அளிக்கும் வாழ்வு. அன்னை கொடுக்கும் வாழ்வு பாத்திரத்தை வற்றாத ஊற்றாக்கும், வாழ்வில் பாத்திரம் பல முறை பயன்படும். பாத்திரத்தில் போட்டால் இருக்கும். பாத்திரத்தால் உற்பத்தி செய்ய இயலாது.

எவரிடம் உதவியை நாடுகிறோமோ, அவரிடம் கர்வமாக (assertive) நடக்கப் பிரியப்படுபவர் ஒரு முறை பாத்திரத்தைப் பயன் படுத்தினால் அப்பாத்திரம் அவருக்கு அடுத்தமுறை பயன்படாதவாறு நடந்து கொள்கிறார். அவரைவிட்டு மனிதர்களும், பொருள்களும், நிகழ்ச்சிகளும், நல்லதும், வாய்ப்பும், தாமே விலகிப்போகும்.

**சாந்தி, பொறுமை, ஆர்வம், ஒருநிலைப்படுதல், சமத்துவம், ஆகியவற்றைப் பெற முயல வேண்டும். ஏற்கனவே ஓரளவு இருந்தால், அவற்றை அதிகப்படுத்த முன் வர வேண்டும்.**

❊ ❊ ❊

மத்தியதரக் குடும்பத்தினர், தனிக்குடும்பம் வைத்தவுடன் பெரும் பாடுபட்டு வாங்கும் பொருள்களை நாம் அறிவோம். T.V. பார்ப்பதை

விட வீட்டில் **T.V.** இல்லை என்பது மரியாதைக் குறைவு என்ற உணர்வு அவர்களை அதிகபட்ச முயற்சி செய்யச் சொல்கிறது. அப்படி அவர்கள் சேகரம் செய்பவை 15, 20 பொருள்களாகும். தேவைப்பட்ட அனைத்தும் சேர்ந்தபின், அப்பொருள்களின் தரத்தை உயர்த்த அதுபோன்ற முயற் சியை மீண்டும் கொள்வதைப் பார்க்கிறோம். மோபெட், மோட்டார் பைக்காகிறது. சிறிய பிரிஜ், பெரியதாகிறது, டி.வி., கலர் டி.வி.யாகிறது.

சாந்தி, பொறுமை ஆகியவை மனவளத்திற்கு அவசியமானவை. அவற்றைப் பெறுவது மத்தியதரத்திற்குக் கீழுள்ளவர்கள், மத்தியதரத்தை எட்டுவது போன்றது. அவற்றைப் பெருக்குவது (**upper middle class**) மேல்தர மத்திய தரத்தினரை எட்டுவது போன்றது.

**சரித்திரத்தைப் பயன்தரும் வகையில் பயில வேண்டும்.**
**பூகோளம் பெரிய அறிவைக் கொடுக்கும்.**
**மேலும் விஞ்ஞான அறிவைப் பெற முயல்வது சிறப்பு.**
**இலக்கியம் எல்லையற்ற பயன் தரும்.**

❊ ❊ ❊

**(Biography)** வாழ்க்கை வரலாறும், சரித்திரமும் பூரணக் கல்வியை அளிக்கும் என்கிறார் பகவான். சரித்திரத்தைச் சரித்திரமாக மட்டும் படித்தால் பரீட்சை பாஸ் செய்யலாம். அக்பர் காலத்தில் பீர்பால் அக்பருக்குப் பிறந்த குழந்தையின் செய்திகளைக் கொண்டு வந்தவிதம் மனிதனைச் சிந்திக்கத் தூண்டும். இலக்கியம் வாழ்க்கை யைப் பிரதிபலிக்கக்கூடியது. நம் வாழ்க்கையை இலக்கியம் எப்படிப் பிரதிபலிக்கிறது என்று யோசனை செய்வது பலன் தரும். நம் வாழ்வோடு தொடர்புள்ள விஞ்ஞான அறிவை அதிகமாகப் பெற முயன்றால் வாழ்க்கை செறிவாக இருக்கும். பூகோளம் படிக்கின்றோம். நாட்டுப் படங்களைப் **(map)** பார்க்கிறோம். எப்படிக் கடற்கரையைப் பூகோளத்தில் நிர்ணயித்தார்கள் என்ற கேள்வி எத்தனை பேருக்கு எழுந்தது? அதில் பதில் எத்தனை பேருக்குக் கிடைத்தது? நமக்குக் கிடைத்ததா? என்றால் பூகோளம் நம்மைச் சிந்திக்கவைக்கும். மலை உயரத்தை எப்படி அளந்தார்கள்? சிங்கப்பூருக்கும் சென்னைக்கும் உள்ள தூரத்தை நிர்ணயித்ததெப்படி? இலண்டனிலிருந்து நியூயார்க் குக்கு 1950இல் முதலில் போன் வந்தது. நாட்டுத் தலைவர்கள் பேசத் துவங்கினார்கள் என்றால், கம்பி எங்கேயிருக்கிறது? கடல் அடியில் என்றால் எப்படிப் போட்டார்கள்? சரித்திரம், இலக்கியம், விஞ்ஞானம் எதுவானாலும் கூர்ந்து படித்தால் அறிவு விருத்தியாகும். புத்திசாலித் தனம் பெருகும். விஷயம் சேகரமாகும். சிந்தனை வளரும். வாழ்க்கை வளம் பெறும். 45ஆம் வயதில் **SSLC** படித்தவரானாலும், **M.A.** படித்தவரானாலும் தம் பாடங்களை இக்கண்ணோட்டத்தில் ஒரு முறை முழுவதும் **(the entire syllabus)** பரிசீலனை செய்தால், அளவு கடந்த பயன் ஏற்படும். முடிவில் தாம் ஒரு **(level)** நிலை உயர்ந்தது தெரியும். நடைமுறையிலும் ஒரு நிலை உயர்ந்துவிடும்.



நாம் வாழ்வில் எதையும் தீவிரமாகக் கருதுவதில்லை. பாடங்களை மட்டுமல்ல. இன்று நம்மைச் சுற்றி நிகழ்வனவற்றையே நாம் கவனிப் பதில்லை. குடும்பத்தில் இது போன்ற அக்கரை குடும்பத்தைச் செழிக்கச் செய்யும். **(Neighbourhood)** நாம் வாழுமிடத்தைக் கூர்ந்து கவனித்தால், அங்கு நமக்கு முக்கியத்துவம் வரும். தொழிலைப் பார்த்தால் பிரமோஷன் வரும். தன்னையே கருதினால் மனநிலை உயரும். அன்னையை இதுபோல் அதிகமாக அறிய முற்பட்டால், ஆன்மா மலரும்.

**நீ இரகஸ்யமானவனானால், அதன் இலாபத்தை நீ அறிவாய். அதனால் ஏற்படும் சிரமங்களை யோசனை செய்து பார்.**

❊ ❊ ❊

இரகஸ்யமானவர் பெரும்பாலும் வாழ்வில் வெற்றி பெற்றவராக இருப்பார். இரகஸ்யமாக இருந்து, தோல்வியடைபவர்களும் உண்டு. இரகஸ்யம் வெற்றியைப் பெற்றுத் தருவதால், அதை உடனே பயன்படுத்த ஆரம்பித்து விடுவார்கள்.

அனைவரும் சுயநலமாக உள்ள இடங்கள், வதந்தி கிளம்பும் இடம், போட்டி நிறைந்த இடங்களில் இரகஸ்யமாக இல்லாவிட்டால், எல்லாம் போய்விடும். இரகஸ்யம் அவசியம். யாரிடம் அவசியம், எந்த

அளவில் அவசியம் என்பதைக் கருத வேண்டும். அவசியமான பொழுதே, இரகஸ்யம் பாதிக்கும், பெரிய அளவில் பாதிக்கும். எப்படி இரகஸ்யம் அவசியமோ, அப்படி (frankness) வெளிப்படையாக இருப்பதும், அளவு கடந்து அவசியம்.

நாளைக் காலை அமெரிக்கா போகும் கணவன், இன்று மாலை வரை மனைவியிடம் சொல்லவில்லை என்பது ஓர் இரகஸ்யக்காரர் நடத்தை. இது ஆபத்து. மனம் விட்டுப் போகும். வீட்டை விட்டு வெளியில் சொல்லாமல் போய், ஓரிரு நாள் கழித்து வருபவர்கள் பலர். கணவனுக்கு என்ன வேலை, என்ன சம்பளம் என்று மனைவிக்கே தெரியாமல் வைத்திருப்பவருண்டு. உடல் நலம் 50ஆம் வயதில் சரியில்லை என்பதை 25 பேர் உள்ள வீட்டில் எவரிடமும் சொல்லாதவர், திடீரென ஒரு நாள் இறந்து போனார். அவருக்கு என்ன என்று தெரிந்தபின், "தெரிந்திருந்தால் சுலபமாகக் குணப்படுத்தியிருக்கலாம்" என்றனர்.

ஒருவர் வெளியூர் அடிக்கடி போவது வழக்கம். பொதுவாக வீட்டில் அட்ரஸ் கொடுப்பதில்லை. எந்த ஊர் போயிருக்கிறார் என்று மட்டும் தெரியும். இரகஸ்யமில்லை. பழக்கமில்லை. ஒரு நாள் அவர் சொற்பொழிவுக்காக 50 மைல் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. போகவில்லை. தம்பி இறந்ததாகத் தந்தி வந்தது. "நான் சொற் பொழிவுக்குப் போயிருந்தால், இந்தத் தந்திச் செய்தியை எனக்கு அனுப்பியிருக்க முடியாது", என்றுணர்ந்த அவர், அதிலிருந்து வெளியூர் போனால் விலாசம் கொடுத்துப் போவது வழக்கம். பாண்டி யிலிருந்து சென்னைக்குக் காரில் கிளம்பியவர் நண்பர் ஒருவருடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, ஏதாவது செய்தியுண்டா எனக் கேட்டார். ஒன்றுமில்லை என்றார் இரகஸ்யக்காரர். இவர் சென்னைக்கு வந்தபின் நண்பர் வீட்டில் அவரைச் சந்தித்தார். "நீங்கள் சென்னைக்கு வருவதாயிருந்தால் ஒன்றாக வந்திருக்க லாமே" என்றார். இரகஸ்யம் அதன் சிறு வேலையைச் செய்தது.

இரகஸ்யம் எத்தனையோ சிறு சௌகரியங்களை இழக்கும், சமயத்தில் வாழ்க்கைக்கே முக்கியமானதையும் இழக்கச் செய்யும்.



குடும்பம், நட்பு, வியாபாரக்கூட்டு, பொது ஸ்தாபனம் ஆகியவற்றில் கடமைக்குரிய (frankness) வெளிப்படையான பழக்கமில்லாவிட்டால், வாழ்க்கையில் சௌகரியங்களை இழக்க நேரும். சமயத்தில் அதிர்ஷ்டத்தையும் இழக்க வேண்டி வரும்.

**உன் திறமைகள் வந்தது எப்படி என ஆராய்ந்து உன் சமயத்தால் (religion) அது வந்ததா எனக் கவனி.**

**மனத்திற்குக் கசப்பானதை இன்று ஏற்கும் பொறுமை உன் அரசியல் அல்லது குடும்பப் பண்பிலிருந்து வந்ததா என்பதைக் கண்டுபிடி.**

**தவறான செய்திகளை நம்புவதன் காரணமென்ன? அவற்றின் அஸ்திவாரம் எது எனப் பார்.**

**இதுபோன்ற காரணங்களால் உன் மனநிலை பாதிக்கப்பட்டதை ஆராய்ந்து பார்த்து, தவறான பழக்கங்களை விட்டுவிடு. உன் நல்ல குணம் சந்தர்ப்பத்தால் வந்தது, பிறப்பால் ஏற்பட்டதன்று என்பதை அறிதல் அவசியம்.**

* * *

கத்தோலிக்கச் சர்ச்சில் பயிற்சி பெற்றவர்கள், பொய் சொல்ல பயப்படுவார்கள். கட்டுப்பாட்டுடனிருப்பார்கள். வேதபாராயணம் செய்த குடும்பங்கள், கனபாடிகள் குடும்பத்தினருக்கு மனப்பாடம் எளிதில் வரும். வைஷ்ணவ, சைவக் குடும்பங்களில் பிரபந்தம் முழுவதையும் மனப்பாடம் செய்திருப்பார்கள், திருவாசகம், அருட்பா பாடல்களைக் குழந்தைகள் சிறு வயதில் ஏராளமாக மனப்பாடம் செய்து பாடியிருப்பார்கள். அவர்களுக்கு மனப்பாடம், செய்யுள், செய்யுள் எழுதும் திறன், உவமை, தமிழ் நன்றாக வரும். ஒவ்வொரு மதவழிபாட்டிலும், பல்வேறு திறமைகள் எழக்கூடிய பழக்கங்கள் உள்ளன. இன்று உனக்குக் கவி எழுத முடிகிறது. மனப்பாடம் வருகிறது. நினைவாற்றல் அதிகம், சரளமாக ஆங்கிலம் வருகிறது, என்பவை உன் குடும்பத்தின் வழிபாட்டால் வந்தன என்பதை அறியும் பொழுது, அவை நம் சொந்தத்

திறமையல்ல, சூழ்நிலையால் ஏற்பட்டவை என்று அறிந்தால் மனம் தெளிவு பெறும். பெற்றோர் அன்னை பக்தர்கள், அதனால் குழந்தைகள் அன்னையை வழிபடுகிறார்கள் எனில், வழிபாடும், பக்தியும் மேலெழுந்ததாக இருக்கும். தானே அன்னையை அறிந்து ஏற்றுக் கொண்டால் அது சொந்த முடிவால் ஏற்றுக் கொண்டதாக இருக்கும். நமக்குப் பக்தி வந்த காரணம் தெரிந்தால், தெளிவு உற்பத்தியாகும்.

தகப்பனார் அரசியல்வாதி, எதிர்கட்சிப் பிரசாரத்தைப் பொருட் படுத்தமாட்டார் எனில் மகனுக்கு எதிரிகள் விஷயத்தில் பொறுமை யிருக்கும். தகப்பனார் நாட்டாண்மைக்காரர், மத்தியஸ்தத்திற்குப் போவார் எனில் மகனுக்குச் சிக்கல்களை அவிழ்க்கத் தெரிந்திருக்கும், கசப்பானவற்றை விலக்கி, அதிலுள்ள சாரத்தை எடுக்கத் தெரியும். இது தெளிவு. தெளிவாக நாம் நம்மை அறிவது உதவும்.

ஓர் ஆபீசிலிருந்து வந்த செய்தியை ஆபீசர் வாயிலாகவும், குமாஸ்தா வாயிலாகவும், பியூன் வாயிலாகவும் கேட்டால் அவை சமயத்தில் முழுவதும் மாறுபட்டும் இருக்கும். மேலதிகாரி இந்த ஊர் வழியாகப் போகிறார் அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்பது ஆபீசர் செய்தியானால், குமாஸ்தா வாயில் அது, ''திடீர் இன்ஸ்பெக்ஷனாக" மாறும். பியூனுக்கு அதே செய்தி "நம் ஆபீசில் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்" என்று புரியும். உத்தியோகத்தின் நிலைக்கேற்ப செய்தியின் உருவம் மாறும். நாம் தவறான செய்திகளை நம்புகிறோம் என்றால் அது நம் வாழ்வில் வந்த காரணமென்ன என்று அறிய வேண்டும். தவறான செய்திகளை நம்புவதற்குக் கீழ்க்கண்டது போன்ற காரணங்களுண்டு.

* எதற்கெடுத்தாலும் பயமுள்ளவர் தவறான செய்திகளை நம்புவார்.
* சிறுவயதில் அளவுக்கு மீறி மிரட்டி வளர்த்த குழந்தைகள் நம்பும்.
* செய்தியின் நிலைக்கும், நம் சமூக நிலைக்கும் உள்ள தூரம் அதிகமானால் நம்புவோம்.
* எதையும் கேட்டவுடன் நம்பும் பழக்கமுள்ளவர் நம்புவர்.

நாம் எக்காரணத்தால் நம்புகிறோம் எனத் தெரிவது நல்லது.



நம் நல்ல குணம், பழக்கம், திறமை, நல்ல பெயர் ஆகியவை நமக்கு வந்ததற்குக் குடும்பம், மதம், ஜாதி, தொழில், ஊர் காரணமாக இருப்பதைக் கண்டால், அவை போக நமக்குள்ள நல்ல குணம் எவை எனப் பார்த்தால், அநேகமாக ஒன்றிரண்டு இருக்கும் அல்லது இருக்காது.

பிறப்பால் ஏற்பட்டவை மாறாது. வளர்ப்பால் ஏற்பட்டவை நிலைக்கும். ஆனால் crisis முக்கியமான சிக்கலான நேரத்தில் உதவாது. இந்தக் கண்ணோட்டத்தில் நம் கடந்த கால வாழ்வை நிர்ணயித்துப் பார்த்தால், நம்மை நாம் எடை போடுவது தெரியும். அது எதிர்காலத்தை நிர்ணயிக்க உதவும்.

**பெரிய இலாபம் பெற பிரயாணச் செலவு செய்யத் தயாராக இல்லை என்பது சிந்தித்தால் புரியும்.**

❊ ❊ ❊

சின்னபுத்தி, விசாலமான மனம் என்பவை எவரும் அறிந்ததே. 25 வருஷம் நன்கொடை வசூல் செய்ய அலைந்து Rs. 2350/- பெற்றவருக்கு ஆண்டுக்கு 80,000ரூபாய் வருமானம் பெறும் எல்லாச் சௌகரியங்களும் இருக்கின்றன என்பதைத் தெளிவாக அறிவுறுத்தியபின், இந்த யோசனை என்னிடம் வேலை செய்பவரிடமிருந்து வருவதால், நான் ஏற்கமாட்டேன் என்பதை அறிவீனம், சின்ன புத்தி, கண்மூடித்தனம் என்றால் பொருந்தும். 800 கோடி திட்டத்தை நிறைவேற்றி 8 கோடி இலாபம் பெற 100 நாள் தேவை என்பதை அன்னைதான் கொடுக்க முடியுமே தவிர வாழ்வில் அந்த அமைப்பில்லை. இதற்கான பிரயாணச் செலவைச் செய்ய, பலன் பெறுபவர் தயாராக இல்லை என்பதை எப்படி விவரிப்பது? வர்ணிப்பது? பகுத்தறிவுக்கும் இவருக்கும் தூரம் அதிகம். அறிவுக்கெதிரான செயல் இது. நம் வாழ்வில் இப்படிப்பட்ட செயல்கள் இருக்கின்றனவா என்று நாம் காண வேண்டும்.

**ஓர் ஆஷாடபூதியைக் குருவாக ஏற்றுக் கொண்டு, அவரையே தெய்வம் எனக் கருதுபவர், அவரை விட்டகன்றால் அவருடைய ஆன்மநிலை உயரும் என்பதை அறிவது சிரமமில்லை.**

❊ ❊ ❊

**Ph.D** பட்டம் பெற்றவர் ஒருவர். தமிழ் நாட்டில் 7 பேர் **Ph.D** பெற்ற காலத்தில் அவர் தமிழ் நாட்டில் சிறப்பாக விளங்கினார்.

ஸ்ரீ அரவிந்தர் எழுதியதைப் புரிந்து கொள்ள முடியாத மனிதனை, இவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்படிப்பட்ட மனிதன் கெட்டிக்காரன். அன்னைக்குப் பின் "அன்னை என்னை ஆசிரமத்தின் தலைவனாக்குவார்". "ஸ்ரீ அரவிந்தர் செய்த யோகத் தைக் கடந்த நிலையில் சித்தி பெற்றவன் நான்" என்பவரை **Ph.D** படித்தவருக்குப் புரியவில்லை என்பது விந்தை. கழைக்கூத்தாடி வித்தைகளையும், ஆன்மீகச் சிறப்பையும் பிரித்துப் புரிந்து கொள்ள முடியாமல் இறுதிவரை குருவாக இவர் ஏற்றுக் கொண்டார். அன்னையை நேரில் அநேகம் தடவை தரிசித்தும், அவர்கள் சேவைக் காக உயிரையே கொடுத்தும், அன்னையிடம் நேரடித் தொடர்பு இருந்தும், இவரால் "குரு"வின் நிலையை அறிய முடியவில்லை. இவர் குருவுக்கு அன்னை, ஸ்ரீ அரவிந்தர் எழுதியவை புரியா. அவர் படித்ததும் இல்லை. நன்றாகப் புரியாவிட்டாலும், பதிந்த அளவுக்கு நல்லது என பகவான் புத்தகத்தை (copy) பிரதி எடுத்துப் பழக்கம். **Ph.D** பட்டமும், பெரிய பதவியும் குருவைப் பற்றிய தெளிவைத் தரவில்லை. இவர் ''குரு''வை விட்டகன்றால், அன்னையின் அனுக்கிரஹம் பிரவாகமாக வரும். இவரே ஏற்றுக் கொண்ட சிறுமதி இவரை அருகிலிருந்தும், அன்னையை விட்டுப் பிரித்து விட்டது.

**பெற்றோர், நண்பர்கள், உடன் வேலை செய்பவர் களுடன் உன்னுடைய (attitude) நோக்கம் சரியில்லை எனில், உடனடியாக அதை மாற்ற வேண்டும்.**

❊ ❊ ❊

தகப்பனார் சேமிப்பை எடுத்துத் தன் செலவு செய்ய வேண்டும், அவர் எப்படியாவது போனாலும் கேள்வியில்லை என்பது மனநிலையானால், அவன் மகனல்லன், மனிதனில்லை. சமூகத்தில் நடைப்பிணமாக இருப்பவன்.

பெற்ற தாயாரைக் கடைசிக் காலத்தில் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை உணராதவன், "என் மனைவி ஒத்துக்



கொள்ளமாட்டாள்" என்பவனை அவன் மனைவி கடைசிவரை கருதமாட்டாள்.

தாயாரை இழந்த, வயதிற்கு வந்த பெண்களுக்குத் திருமணம் தடைப்படும் வழியில் தம் சௌகரியத்தையும், சந்தோஷத்தையும் தேடும் தகப்பனாரைத் தடுத்து, பெண்கள் என்னாவது எனக் கேட்டால், "அதன் தலைவிதி அவ்வளவுதான்" என்பவரை உலகம் பழிக்கும், கடைசி கடமையைப் பிறர் அவருக்குச் செய்வதையும் வாழ்வு தடுக்கும்.

சொந்த (தாய்) வீட்டுப் பெருமைக்கும், சௌகரியத்திற்கும், மகளின் வாழ்வை அடகு வைக்கவும், மகனின் வாழ்வை அழிக்கவும் முன் வருபவள், பாசமுள்ளவளல்லள்; சுயநலமும், வீண் கர்வமும் உடையவள். அன்பைப் பெற முடியாதவள், ஆதரவை விலக்குபவள்.

15 வருஷம் ஒரு வீட்டில் ஒரு வேலையும் செய்யாமல் இனாமாகத் தண்டச் சோறு சாப்பிடுவதை உரிமையுடன் சாப்பிட்ட சொரணை கெட்ட ஜன்மம், அந்த வீட்டு அம்மாள் சாகப் பிழைக்க ஆஸ்பத்திரியில் இருக்கும்பொழுது போய்ப் பார்க்கவும் இல்லை எனில், அவன் மலஜலம் கழித்து அதிலேயே புரண்டு கிடப்பதை உலகம் அறியாமல் வாழ்வு செய்யும் என அவன் அறியமாட்டான்.

நண்பனுக்குத் துரோகம் செய்யும் வகையில் அவன் மனைவியை நாடுபவன், நாளை தன் மனைவி பகிரங்கமாகத் தவறான நடத்தையை அனுசரிப்பாள் என எதிர்பார்ப்பதில்லை.

இவர்களெல்லாம் சமூகத்தின் மேல் மட்டத்திலோ அல்லது சராசரியிலோ உள்ளவரில்லை. அடி மட்டத்தில் உள்ளவர்கள். இதுபோன்ற ஒரு குணம் நம்முள் மறைந்திருக்குமானால், அதை உடனே அகற்ற வேண்டும். அகற்றாமல் மனிதனாக வாழ முடியாது. முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவது அறிவீனம்.

தொடரும்.

## ஜீவிய மணி

பெரு நஷ்டத்தைப் பொறுமை பெரிய இலாபமாக மாற்றும்.

# லைப் டிவைன்

கர்மயோகி

## VIII. The Methods of Vedantic Knowledge

*Page No: 62*
*Para No: 5*

All our experience is psychological.
We receive by our senses.
It goes to the sense-mind.
Indian philosophy calls it Manas.
Sense-mind translates the experience for us.
Therefore, it is psychological.
Manas is the sixth sense.
So say our philosophers.
We may say it is the only sense.
Vision, hearing, smell, touch, taste are other senses.
We can say they are specializations.
Manas uses the sense organs.
They are the base for its experience.
Manas, yet, exceeds the sense organs.
It is capable of direct experience.
Reason's understanding is psycological experience.
It is mixed or dependent.
Or, it is pure or sovereign.



## 8. வேதாந்த ஞானம்

அனுபவம் என்பது ஆத்மா உறையும் மனத்திற்குரியது.
புலன்களால் அவற்றை நாம் பெறுகிறோம்.
அது புலனறிவை அடைகிறது.
நாம் அதை மனஸ் என்கிறோம்.
புலன்கள் அனுபவத்தை விளக்குகின்றன.
எனவே, அவை மனத்தைப் பற்றியவை.
மனஸ் என்பது ஆறாம் அறிவு.
நம் தத்துவம் அப்படிச் சொல்கிறது.
மனம் மட்டுமே நம் புலன் எனவும் கூறலாம்.
பார்வை, கேட்பது, மனம், தொடுதல், ருசி மற்ற புலன்களாகும்.
அவற்றைக் குறிப்பான செயல்கள் எனலாம்.
மனம் புலன்களைப் பயன்படுத்துகிறது.
புலன்களே அனுபவத்திற்கு அடிப்படை.
இருப்பினும், மனம், புலன்களைக் கடந்தது.
நேரடியான மனம் அறியக் கூடியது.
அறிவால் புரிவது மனத்தின் அனுபவம்.
அது கலப்படமாக, புலனை நம்பியதாக இருக்கலாம்.
அல்லது தூய்மையாக, பவித்திரமாக இருக்கலாம்.

It is mixed with outer objects.
It is pure with itself.
Reason can depend on senses.
It can form perceptions by the senses.
Or, It can act in itself.
It can be aware of things directly.
It is a sort of identity with them.
We are thus aware of our emotions.
We are aware of anger.
That is, we become anger.
We are also aware of our existence.
This is knowledge by identity.
This is the nature of experience.
It has a true character.
It is hidden from us.
By exclusion, we are separate from the world.
We are our subject.
The rest are objects for us.
Now there is separation.
The world is separated from us.
To know the world we need organs.
We have developed those organs.
Direct knowledge is no longer possible.
So, there can be indirect knowledge.
It is caused by physical contact.



மற்ற பொருள்களுடன் கலந்துள்ளது அறிவு.
தனித்துள்ள போது தூய்மையாகவுள்ளது.
அறிவு புலனை நம்பிச் செயல்படலாம்.
புலனைக் கொண்டு, அதன் மூலம், அறிவு புரிந்து கொள்ளலாம்.
அல்லது தானே செயல்படலாம்.
நேரடியாக நிகழ்ச்சிகளையறியலாம்.
அவற்றுடன் அப்படி ஐக்கியமாவதுண்டு.
நம் உணர்வோடு நாம் அப்படி ஐக்கியமாகிறோம்.
கோபம் நாம் அறிவது.
நாமே கோபமாக மாறுகிறோம்.
நம்மை நாமறிவோம்.
ஐக்கியத்தால் வரும் அறிவு இது.
இதுவே அனுபவத்தின் தன்மை.
இது உண்மை.
இது நம்மிடமிருந்து மறைந்துள்ளது.
உலகிலிருந்து நாம் விலகியுள்ளோம்.
நமக்கு நாமே முக்கியம்.
மற்றவை நமக்கு புறப்பொருள்கள்.
பிரிவினை வந்தது.
உலகம் நம்மிடமிருந்து பிரிகிறது.
உலகத்தை அறியும் உறுப்புகள் தேவை.
இவை நமக்குண்டு.
நேரடி ஞானம் இனி இல்லை.
எனவே ஞானம் மறைமுகமாக வரும்.
அது தொடு உணர்ச்சியால் எழும்.

Mental sympathy also gives that knowledge.
This is a limitation.
It is caused by ego.
Ego always proceeds on this basis.
Ego starts from an original falsehood.
It covers the true truths.
It offers contingent falsehood in its place.
We take them to be practical truths.

*Para: 6*

This is our nature.
It is a nature of mental and sense knowledge.
We are presently organised thus.
These are our existing limitations.
In it there is no inevitable necessity.
This is a part of human evolution.
Or, it is a result of it.
These are certain physiological functionings.
They have their reactions.
Mind depends on them.
Mind is accustomed to them.
Around us is the normal universe.
It is the material universe.
Mind, thus, relates to it.
We have to be aware of the external world.
It is the rule.



அனுதாபத்தாலும் ஞானம் வரும்.
இதுவே வரையறை.
அகந்தையால் இது ஏற்பட்டது.
அகந்தையின் வழி இதுவாகும்.
முழுப் பொய் அகந்தையின் ஆரம்பம்.
சத்தியத்தை அகந்தை மறைக்கிறது.
அதற்குப் பதிலாக நடைமுறைப் பொய்யை அகந்தை அளிக்கிறது.
நாம் அவற்றை நடைமுறை உண்மை எனக் கொள்கிறோம்.

இதுவே நம் சுபாவம்.
புலனறிவும், மனத்தின் அறிவும் சேர்ந்த ஒன்று இது.
இது நம் இன்றைய அமைப்பு.
இன்றுள்ள வரையறை இவை.
இவற்றிற்கு அவசியம் என்று ஒன்று எழவில்லை.
மனித வளர்ச்சியின் பாங்கு இது.
அல்லது மனித வளர்ச்சியின் முடிவு இது.
உடல் செயல்படும் வழிகள் உள்ளன.
அவற்றிற்குத் தேவைகள் உள.
மனம் அவற்றை நம்பி வாழ்கிறது.
இது மனத்தின் பழக்கம்.
நம்மைச் சுற்றி உலகம் உண்டு.
அது ஜட உலகம்.
மனம் உலகத்தைத் தொடுகிறது.
புறஉலகை நாம் அறியவேண்டும்.
இது சட்டம்.

We have to do so indirectly.
It must be through sense-organs.
Sense can convey only a limited truth.
We can experience only that much.
Yet, it is only a rule.
The rule is after all a habit.
Maybe it is the regularity of a habit.
Mind can know directly.
It can know the objects itself.
It needs no aid of the sense organs.
It would be natural for the mind.
Thus, it is liberated.
It is liberated from the domination of matter.
Hypnosis does so.
Other psychological phenomena also act so.
Life evolves.
Life works out a balance between mind and matter.
This working has a balance.
This balance limits the waking consciousness.
It also determines it.
Direct knowledge is impossible for mind.
It is impossible during its waking hours.
Therefore the waking mind must go to sleep.
That sleep liberates the true mind.
The true mind is the subliminal mind.



இதை நேரடியாகச் செய்யமுடியாது.
புலன்கள் மூலமே செய்ய வேண்டும்.
புலன்களால் உண்மையை முழுவதும் தரமுடியாது.
அந்த அளவுக்கே அறியமுடியும்.
இது வெறுஞ் சட்டமே.
சட்டம் என்பது பழக்கம்.
நெடுநாளைய பழக்கமாகவுமிருக்கலாம்.
மனம் நேரடியாக அறியமுடியும்.
பொருள்களை மனம் அறியும்.
மனத்திற்குப் புலன் தேவை என்பது இல்லை.
புலனின்றிச் செயல்படுவது மனத்தின் இயல்பு.
மனம் அங்ஙனம் விடுதலை பெறுகிறது.
ஜடத்தினின்று மனம் விடுதலை பெறுகிறது.
மந்திரமயக்கத்தில் இது நடக்கிறது.
இதுபோன்ற பலவகை நிகழ்ச்சிகளுண்டு.
வாழ்வு வளர்கிறது.
மனத்தையும் ஜடத்தையும் வாழ்வு இணைக்கிறது.
அவற்றை நிதானப்படுத்துவது வாழ்வு.
விழிப்பை ஆள்வது இந்த நிதானம்.
நிர்ணயிப்பதும் அதுவே.
மனத்தால் ஞானத்தை நேரடியாகப் பெறமுடியாது.
அதுவும் விழிப்பில் பெறுதல் கடினம்.
ஞானம் பெற விழிப்பு விலக வேண்டும்.
சமாதி நிலையில் அது விலகும். மனம் விடுபடும்.
அடிமனமே உண்மை. அது விடுதலை பெறும்.

Then mind is free.
A free mind can assert.
Assertion brings out its true character.
It is the all-sufficient sense.
Rather it is its one sense.
Mind then is free to apply to the objects.
It applies its pure action.
It need not apply its mixed action.
This is not an impossible faculty.
It is more difficult in the waking state.
There are psychological experiments.
There are people who have gone far there.
They all know this truth.

contd...

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சுதந்திரமானவன், தனக்கென வகுத்துக் கொள்ளும் செயல்முறையைக் கட்டுப்பாடு என்கிறோம். அது போன்ற கட்டுப்பாடு, பண்பின் அடிப்படையில் உருவான சுபாவம் ஆகும்.



இனி மனம் சுதந்திரம் பெற்றது.
சுதந்திரமான மனம் ஆட்சி செய்யும்.
ஆட்சியில் அதன் உயர்வு வெளிவரும்.
உயர்வு என்பது அனைத்தையும் அறியும் புலன்.
அது மட்டுமே புலன் எனலாம்.
மனம் அப்புலனால் பொருள்களை அறியலாம்.
அது மனத்தின் சுதந்திரமான செயல்.
அது கலப்பற்ற செயல்.
இது இல்லாத திறமையன்று.
விழிப்பில் இதைப் பெறுதல் கடினம்.
மனத்தை அடைந்தவருண்டு.
அதில் அனுபவப்பட்டவருண்டு.
அவர்கள் இவ்வுண்மையை அறிவர்.

தொடரும்...

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எதை ஒரு க்ஷணம் கூடப் பொறுக்க முடியாதோ, அதை மனிதன் விரும்பி நாடுவான் என்பதற்குத் திருமணம் சிறந்த உதாரணம்.

# இம்மாதச் செய்தி

**கல்லில் விக்ரஹத்தைச் செதுக்கி அதில் தெய்வத்தை பிரதிஷ்டை செய்து, கோவில் கட்டி வழிபடுகிறோம்.**

**அன்பரில் அன்னையைக் கண்டு அதை நம் பக்தியால் உயிர்ப்பித்து, அவரை நடமாடும் திருக்கோயிலாக்கி, அவர் பாதங்களில் பொன்னொளியைக் கண்டு வணங்கி, வழிபட்டு விழிநீர் பெருக்கி, பரவசமடைய முன்வருதல் உயர்ந்த யோகம்.**

* * *





# ஆபத்து

வசதியாகப் பிறந்து, வசதியாக வளர்ந்து, வாழ்க்கையை நடத்துபவர்கள் “ஆபத்து” என்பதைக் கண்டிருக்கமாட்டார்கள். சில சமயங்களில் எழுந்தால், அந்த நேரம் தம் திறமையால் சமாளித்துக் கொண்டிருப்பார்கள். கொஞ்ச நாள் கழித்து ஆபத்து வந்ததையும், போனதையும் மறந்துவிடுவார்கள். இவர்களுக்கும் நான் சொல்லப் போகும் ஆபத்துண்டு. ஆனால் இவர்கள் சிறுபான்மையோர்.

பெரும்பான்மையோர் வாழ்வில், அதுவும் தொடர்ந்து முன்னேறுபவர் வாழ்வில் இந்த ஆபத்து அடிக்கடி வரும். அதைச் சமாளித்து வெற்றி காணாவிட்டால், அந்த நிலை வாழ்வு இனி இல்லை என்று போய்விடும். 3 தம்பி, 3 சகோதரிகளுடன் பிறந்தவர் ஒருவர். அனைவரும் பட்டதாரிகள். இவர் கல்லூரிக்குப்போக வேண்டிய நேரம், குடும்பத்தலைவரான பெரியப்பாவுக்கு இவர் மீது ஒரு சிறு விஷயத்திற்காகக் கோபம் வந்தது. கல்லூரிக்கு போகவில்லை! இத்தனை வருஷமாகக் குடும்பத்தில் அனைவரும் உயர் நிலையிலுள்ளபொழுது, கல்லூரிக்குப் போகாததால், அதற்குரிய வாழ்வும், அதற்குரிய மரியாதையும் பெற்றுவருகிறார். இதையே நான் ஆபத்து எனக் குறிப்பிடுகிறேன்.

இந்த நேரம் எப்படியாவது பெரியப்பாவைத் திருப்தி செய்யத் தோன்றும். பொதுவாக அது பலிக்காது. சில சமயங்களில் பலிக்கும். அது பலிக்கும் சமயம் நாம் எவ்வளவு தூரம் இறங்கிவர வேண்டியிருந்தது எனத் தெரியும். அப்படி ஜெயித்த பிறகு வாழ்க்கை தரும் பலன் நாம் இறங்கி வந்த குணத்திற்குரியதாகும். வாழ்வில் இந்நிலை அதிகமாக உள்ளது.

அன்னையின் சக்தி அபரிமிதமானது. அற்புதங்களைச் செய்ய வல்லது என்றால், இது போன்ற நேரங்களில், உண்மையாகவும், தைரியமாகவுமிருந்தால் அது இறங்கி வந்து அற்புதம் நிகழ்த்துவதைக் காணலாம். பெரும்பாலும் அற்புதங்கள் நிகழும் நேரங்களில் இவ்வுண்மையும், தைரியமும் முன்வருவதைக் காணலாம்.

நிலம் மலிவாகக் கிடைக்குமிடங்களில் நீரிருக்காது. உயிருக்கு ஆபத்திருக்கும். பயிரைக் காப்பாற்ற முடியாது. பயிர் பலன்தாராது. ஆசைப்பட்டவர்கள் இங்கு நிலம் வாங்கி ஆபத்தை எதிர் கொள்வார்கள்.

ஆசையை விலக்கி, அன்னையால் உந்தப்பட்டு நிலம் வாங்கிய இடம் இதுபோன்ற இடமாக அமைந்தது. நிர்வாகத்திற்கோ, காவலுக்கோ, ஆள் கிடைக்காது. இவர்களே திருடுபவர்களாக இருந்தார்கள். நிலம் வாங்கி, பயிர் ஏற்றுமுன் வெளியூர் என்பதால், பாதுகாப்பு ஏற்பட்ட பின்னரே முதலீடு செய்ய முடியும். இது நிலையில்லாத நேரம். ஊரும், மனிதர்களும் எவ்வளவு தூரம் தங்கள் ஆர்ப்பாட்டம் பலிக்கும் என்று கணக்கிடும் நேரம். இல்லாத பிரச்சினையைக் கிளப்புவதுண்டு. சிறியதைப் பெரியதாக்குவதுண்டு. அன்பர் நிர்வாகியை நியமித்தார். நிர்வாகியே நிலையில்லாதவர். ஒரு நாள் அன்பரும் நிர்வாகியும் ஊர் வழியே வரும்பொழுது ஒருவன் குடித்துவிட்டு சண்டைக்கு வருகிறான். பலரும் வேடிக்கை பார்க்கிறார்கள். நிர்வாகி அன்பர் தம்மை எதிர்பார்க்கும் நேரம் எனப் புரிந்து கொண்டு அவனும் வேடிக்கைப் பார்க்கிறான். இந்த நேரம் சற்று இடம் கொடுத்தால், இனி இங்குப் பயிரிட முடியாது என்ற நிலை. ஊர் மக்கள் குடிகாரனைத் தடுக்க வேண்டும். அவர்கள் தடுக்கவில்லை. ஊரைச் சேர்ந்த நிர்வாகி அவனை விரட்ட வேண்டும். அவனும் திருட்டு எண்ணத்துடனிருக்கிறான். இனி அன்பர் குடிகாரனுடன் சண்டையிடுவது முடியாது. அடுத்து என்ன? அத்தனையும் போய்விடும்!

**அன்பர் நிதானமானார். குடிகாரனை நோக்கி, "வா, இங்கே வேண்டியதைக் கேள்'' என்றார். பிரவாகமாக அன்னை சக்தி அவருள் புகுந்தது, குடிகாரன் சற்று அடங்கினான். நிலைமை தன் கையை விட்டுப்போவதை நிர்வாகி உணர்ந்தான். நிர்வாகி சுதாரித்துக் கொண்டு குடிகாரன் மேல் பாய்ந்தான். சக்தி செயல்பட்டது. சில மாதங்களில் அன்பருக்குத் தொந்தரவு கொடுத்த குடிகாரன் இறந்து விட்டான்.** ***தைரியம் சக்தியை செயல்படச்செய்யும்.***

❊ ❊ ❊





## Calling the adventure of consciousness & Joy
## துணிச்சலான ஜீவியத்தின் சந்தோஷத்தை அழைப்பது

சத்பிரேம் என்ற பிரெஞ்சுச் சாதகர் அன்னையை நெருங்கி வந்த பொழுது அவரை அன்னை பூரணயோகத்தைப்பற்றி ஒரு புத்தகம் எழுதச் சொன்னார். அவர் எழுதினார். அந்நூல் உலகில் பிரபலமாயிற்று. அந்நூல் வெளியான பின் ஆசிரமம் வந்த மேல் நாட்டார் எவரையும் "எப்படி அன்னையைத் தெரிந்து கொண்டீர்கள்?" எனக் கேட்டாலும் இப்புத்தகத்தின் மூலம் அறிந்தேன் எனப் பதில் வரும். அவர் எழுதிய புத்தகத்தின் பெயர்,

**Adventure of Consciousness**
**or Sri Aurobindo**

**Adventure** என்பதற்கு நேரடியான தமிழ்ச்சொல் தெரியவில்லை. இருப்பது அத்தனையையும் விட்டு இல்லாததை தேடுவது என்பது ஒரு பொருள். வீரச் செயல் என்பது மற்றொன்று. முழு **risk** எடுத்துக்கொள்வது அடுத்த அம்சம், இத்தனையும் சேர்ந்தது **adventure** என்பதாகும்.

மலை ஏறுபவன், உலகம் சுற்றப் புறப்படுபவன், எதிரிகளை அவர்களிடத்தில் போய்ச் சந்திக்க முன் வருபவன், கரணம் தப்பினால் மரணம் என நிலையை விரும்பி நாடுபவனை **adventurer** என்கிறோம். இவர்களில் நூற்றில் ஒருவர் தப்பிப் பிழைப்பார். ஆயிரத்திலொருவர் வெற்றியடைவார். வாழ்க்கையில் பெரிய **adventure** எது என ராஜாஜி விவரிக்கும் பொழுது, "சிறுவயதில் திருமணமாகி மாமியார் வீட்டிற்குப் போகும் பெண் சந்திப்பது பெரிய **adventure**" என்றார்.

ஐயங்காரான ராஜாஜி செட்டியார் காந்திஜி மகனுக்கு அந்த நாளில் பெண் கொடுத்தது ஒரு **adventure** ஆகும். 1919இல் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியப் பத்திரிகைகள்மீது கைக்கூலிகளை ஏவியபொழுது

இந்துப் பத்திரிகை, "நாங்கள் தேசபக்தியினின்றும், பத்திரிகை தர்மத்தினின்றும் வழுவமாட்டோம்" என்று எழுதியது அதுபோன்ற செயல்.

ஹிட்லர் ஐரோப்பாவை முழுவதையும் வென்றபின் இங்கிலாந்து தனியாக நின்று எதிர்த்துப் போராடியதும் அதுபோன்ற செயலாகும். மதுரை மன்னனை நீதிகேட்டு கண்ணகி தன் நிலையை விளக்கியது, நவகாளிக்கு காந்திஜி போலீஸ் உதவியை மறுத்துப்போனது, ராஜஸ்தானில் வினோபாஜி கொள்ளைக் கூட்டத்தினரைச் சந்தித்து போலீஸுக்குச் சரணடையச் சொல்லியது, இந்து முஸ்லீம் கலவரத்தில் நேரு தைரியமாக நடந்தது, பெருந் தீவிபத்தில் தீயினுள் நுழைந்து உயிரைக் காப்பாற்ற முயல்வது, கோர்ட்டில் தனக்கெதிரான செய்தியைச் சொல்ல - உண்மை என்பதால் - முன்வருவது, கப்பல் மூழ்கும் பொழுது 400 பேர் விலகி குருடனுக்குத் தப்பிக்க வழிவிடுவது போன்ற செயல்கள் அப்படிப்பட்டவையாகும்.

யோகம் என்பது உடலை ஆராய்ச்சிக்கூடம் (**laboratory**) என மாற்றுவதாகும். விஞ்ஞானி பிராணிகள் மீது சோதனை செய்தால் யோகி அதுபோன்ற சோதனையைத் தன் உடல், மனத்தின் மீது செய்ய வேண்டும். சோதனை தவறினால் உடல் நோயுறும், மனம் ஸ்வாதீனத்தை இழக்கும் - பைத்தியம் பிடிக்கும். இங்கு தன் உயிரை யோகி **risk** செய்ய வேண்டியிருக்கிறது எனில் **adventure of consciousness** எனில் என்ன?

மனத்திற்கு மேல் ஆன்மாவின் 4 பகுதிகளைக் கடந்து சத்திய ஜீவியம் வந்து ஜீவியத்தை (**consciousness**) அடையவேண்டும். அது தெய்வநிலையைக் கடந்தது. அங்கு கிடைக்கும் ஜீவியம் **Mother's Consciousness,** அன்னை ஜீவியம். அது கிடைத்தபின் அதை இழக்கும் வகையில் செயல்படுவது **Adventure of consciousness** ஆகும்.

**கிடைத்தற்கரிய அன்னை ஜீவியம் கிடைத்தபின் அதைக் கடந்து செல்ல எடுக்கும் யோக முயற்சி adventure of consciousness ஆகும்.**

❈ ❈ ❈





**Vol 7, P.9**

## The ascetic truths are no longer true

## தவம், நோன்பு, விரதம் இனி வரும் ஆன்மீகத்திற்குப் பயன்படா

இது கஷ்டப்பட்டு உழைத்த காசு என்று மனநிறைவுடன் பேசுவதை அறிவோம். குழந்தை பெரியவனாகிப் பெயரெடுத்தபின், ''எத்தனை இரவு கண்விழித்தேன், எவ்வளவு சிரமங்களை அனுபவித்தேன்'', இதெல்லாம் அதன் பலன் எனத் தாய் கூறுவாள்.

* *கஷ்டப்படாமல் பலனில்லை.*
* *கஷ்டப்பட்டுப் பெற்ற பலன் உயர்ந்தது.*
* *வெற்றி உயர்வாக இருக்க வேண்டுமானால் எளிமையாக இருக்க வேண்டும், கஷ்டப்பட்டு வந்ததாக இருக்க வேண்டும்,*

என்பவை உலகில் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஆன்மீக உண்மை. ஆணி மீது படுப்பது, உடலைச் சாட்டையாலடிப்பது, சாப்பாட்டில் சாம்பலைச் சேர்த்துச் சாப்பிடுவது துறவிகள் சில சமயங்களில் மேற்கொள்ளும் பழக்கங்கள்.

* *இவற்றுள் உள்ள உண்மையை ஸ்ரீ அரவிந்தம் முழுவதும் ஏற்கிறது.*
* **நாம் பெறும் பலனிலிருந்து கஷ்டத்தை அறவே நீக்குகிறது ஸ்ரீ அரவிந்தம்.**
* *ஆன்மீக அடிப்படையில் கஷ்டப்படவேண்டியதை அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் ஏற்றுக் கொண்டனர். மனிதன் உடலால் வாழும்வரை கஷ்டப்பட்டே பலன் பெற வேண்டும் என்பது உண்மை. உடலால் வாழும் மனிதன் மனத்தால் வாழ ஆரம்பித்துவிட்டால் கஷ்டம் பேர் அளவுக்கு விலகி, பலன் கஷ்டமில்லாமல் வரும் என்பதும் உண்மை. ஆன்மா முதிராதவரை (**child soul**) ஆணி, சாட்டை, சாம்பல் தேவை. வளர்ந்த ஆன்மாவுக்குக் கஷ்டம் தேவையில்லை என்பது பகவான் கூற்று. இந்தியச் சுதந்திரத்திற்காக பகவான் சூட்சுமத்தில் ஆன்மீக சக்தியால் வேலை செய்ததால், பலன் கத்தியின்றி, இரத்தமின்றி வந்தது.*

**இந்தியா பெற்ற சுதந்திரம், ஆன்மீக உழைப்புக்கு அவதிப்பட**

**வேண்டாம் என்று நடைமுறை எடுத்துக்காட்டாகக் கூறுகிறது.**

மனம் இருளால் நிறைந்திருந்தால், விலங்கு போலிருந்தால், தீமையானதானால், கெட்ட எண்ணம் கொண்டதானால் கடுமைப்படுத்தாமல் இவை நம்மை விட்டுப் போகாது. மனம் ஒளியால் நிறைந்து மனித உள்ளமாக இருந்தால், நல்லெண்ணம், நல்லதால் நிறைந்திருந்தால் அன்னையிடமிருந்து ஆன்மீகப் பலன்பெற,

**கடுமை தேவையில்லை. இனிமையே விரதமாகும்.**

மனமே மனிதனின் மையம். மையம் ஒளியால் நிரப்பப்பெற்றால் பலன் ஒளியை நாடிவரும். இருளால் நிரப்பப் பெற்றால் அது பலனை விலக்கும். இருளை ஒளியாக மாற்ற கடுமை தேவை. உபவாசம் அவசியம். அதுவும் இருள் அழிய வேண்டும் என்ற எண்ணம் இருளை விட ஆழமாக இருந்தால், அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய முடியுமானால் அதுவும் தேவையில்லை. மௌனம் பெற 18 ஜன்மமாகும், அல்லது 1½ கோடி முறை ஓம் என்ற பிரணவ மந்திரத்தை ஜபிக்க வேண்டும். பல ஆண்டுகள் தியானம் பயில வேண்டும் என்பது மரபு.

அன்பர்கள் மனம் மலர்ந்து, மகிழ்ந்து அன்னையால் அது நிரம்பி, பூரித்து அன்னையை அழைக்க ஆரம்பித்தால் சற்று நேரத்துள் மௌனம் மனத்தைத்தொட்டு, நிறைவதைக் காணலாம். மன மகிழ்வை உயர்த்தினால், மௌனநிலை உயர்வதைக் காணலாம். இதுவே அன்னையின் மேற்சொன்ன கூற்றுக்கு விளக்கம்.

மரபுவழி கடுமையாகப் பெறும் பலன்களை அன்னையிடம் அகமகிழ்ந்து பெறலாம். 48 நாள் உபவாசம், நோன்பு இருந்து பெறும் பலனைக் காலையில் அன்னையிடம் சமர்ப்பணம் செய்தால், மாலையில் பலன் வருவதைக் காணலாம். எந்த அளவுக்கு மனம் சந்தோஷமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குப் பலன் அதிகரிப்பதையும், விரைவில் வருவதையும் காணலாம்.

* *இதுவரை பெற்ற ஆன்மீகப்பலன் திண்ணைப் பள்ளியில் தோப்புக் கரணம், கோதண்டம், பிரம்படிப் பெற்றுக் கிடைத்த படிப்புபோன்றது.*
* *இனிவரும் ஆன்மீகப்பலன் குழந்தைகள் குதூகலமாகக் கற்கும் புதிய முறைகள் போன்றது.*

❋ ❋ ❋





**Archievs Apr-Dec '79 - Page 90**

## "Lord, I do not know you have need of these utensils"

## "இறைவா, உனக்கு இப்பாத்திரங்கள் தேவை என்பதை நானறியேன்"

ஸ்ரீ அரவிந்தர் ஓர் யோகியின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு திருடன், வந்தவன் போனபின், அந்த யோகி அங்குள்ள பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவன் பின்னால் ஓடியதைக் கூறி மேற்சொன்னவாறு யோகி சொல்லியதாக எழுதுகிறார். அதிக விவரம் இல்லாததால், நாமே யூகிக்க வேண்டியிருக்கிறது. வந்த திருடன் ஏதோ காரணத்தால் போய்விட்டான். யோகி, வந்தவனைத் திருடனாகப் புரிந்துகொண்டு சும்மாயிருந்துவிட்டார். திருடன் போய், கொஞ்சநேரம் ஆனபின் வந்தது இறைவன் என யோகி அறிகிறார். பாத்திரங்களை வேண்டி வந்திருக்கிறான் இறைவன். நாம் அதை அறியாமல் இறைவனை வெறுங்கையோடு திருப்பி அனுப்பிவிட்டோம் என உணர்கிறார். உணர்ந்தபின் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவன் பின்னே ஓடி மேற்சொன்னவாறு பேசுகிறார் என்று தெரிகிறது.

இதை விமர்சனம் செய்து பகவான், "நாமும் இதையே செய்ய வேண்டும் என்று பொருளில்லை. நோக்கம் இதுபோலிருப்பது நல்லது" என்று கூறுகிறார். தத்துவப்படி எல்லா மனிதர்களும் இறைவனே, எல்லாப் பொருள்களும் இறைவனே என்றாலும், முக்கியமான நேரத்தில் இறைவன் வெளிப்படுகிறான். நாம் பராமுகமாக இருந்து நேரத்தைத் தவறவிடுகிறோம் என்பதே கருத்து.

ஒரு பாங்கில் கடன்வாங்கி தொழில் நஷ்டமானபின் வருத்தமாக உட்கார்ந்துள்ளபொழுது அடுத்த பாங்க் ஏஜெண்ட் வந்து, "என்னுடன் உங்கள் கிராமத்தை சுற்றிப்பார்க்க வரவேண்டும்" என்று கேட்ட பொழுது ஆத்திரமும், வருத்தமும் வந்ததை ஒதுக்கிவிட்டு "கூப்பிடும்பொழுது போகாமலிருக்கக்கூடாது" என்று போன பக்தரிடம்

ஏஜெண்ட், "நான் உங்களுக்கு அடுத்த பாங்க் கடனைத் திருப்பித்தர உதவ வேண்டும் என வந்தேன்" என்றார். நமக்குத் தொந்தரவாகப் படுவது இறைவனுடைய அருட்செயல் என நாம் அறியமுடிவதில்லை. இந்த மனப்பக்குவம் எல்லாச் செயல்களையும் இறைவன் செயலாக அறிய உதவும்.

ஏஜெண்ட் உதவி செய்ய முன் வருகிறார். அதுவே இல்லை என்றாலும், நடப்பது இறைவன் செயல்தான் என அறிவது ஆன்மீகப் பக்குவம்.

❊ ❊ ❊


## MALARNDHA JIVIY AM

Form IV (See Rule 8)

*Statement about ownership and other particulars about Malarndha Jiviyam (according to Form IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India)*

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | *Pondicherry* |
| 2. Period of its Publication | : | *Monthly* |
| 3. Printer's Name | : | *Mrs. Anuradha Sriram*<br>*Integra*<br>*51, II Cross, Jawahar Nagar,*<br>*Nellithope Post,*<br>*Pondicherry - 605 005.* |
| 4. Publisher's Name | : | *Mr. P.V. Balakrishnan*<br>*177, Pappammal Koil Street,*<br>*Pondicherry - 605 012.* |
| 5. Editor's Name | : | *Karmayogi* |
| Nationality | : | *Indian* |
| Address | : | *Plot 4, Venkata Nagar Extn.*<br>*Pondicherry 605 011.* |
| 6. Name and address of the individual who owns the newspaper and partners or share holders holding more than 1% of the capital | : | *The Mother's Service Socity,*<br>*Plot 4, Venkata Nagar Extn.,*<br>*Pondicherry - 605 011.* |

*I, P.V. Balakrishnan, hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.*

*P.V. Balakrishnan*

Date : *02-03-2000* Signature of the Publisher.






## The physical mind sees things upside down

## ஜட மனம் விஷயங்களைத் தலைகீழே புரிந்து கொள்கிறது

தண்ணீரில் உள்ள பென்சில் உடைந்ததுபோல் தோன்றுவது தோற்றம், உண்மையன்று. 500 ஆண்டுகட்கு முன்வரை சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்று நினைத்தார்கள். உலகம் தட்டையானது என்பதே வெகுநாள்வரை அபிப்பிராயம். இவையெல்லாம் நம் அறியாமை என படித்தவர்கள் அறிவதுபோல் வாழ்விலும், அரசியலிலும், படிப்பிலும் நம் அறியாமை வெளிப்படுவதை பகவான் மேற்கண்டவாறு கூறுகிறார். அவற்றுள் சில,

* சர்க்கார் வேண்டுமென்ற பணத்தை அச்சடித்துக் கொள்கிறது.
* ஆஸ்ப்ரின் தலைவலியைக் குணப்படுத்துகிறது.
* ஊசிபோட்டால் வியாதி குணமாகும்.
* பட்டம்பெற்றால் அறிவும் பண்பும் வளரும்.
* நல்லவனுக்கு வாழ்வில் நல்லது நடக்கும்.
* தெய்வம் நம் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.
* மனிதன் நல்லவன் என்று பெயரெடுக்கப் பிரியப்படுவான்.

மனிதன் உலகத்தை உற்பத்தி செய்தான். உலகிலுள்ள அத்தனையும் மனிதனால் செய்யப்பட்டவை. ஆனால் மனிதன் தான் உற்பத்தி செய்த பணத்தை தன்னைவிட முக்கியமாகக் கருதுகிறான். அதற்கு அடிமையாகிறான். இதைச் செய்வது ஜடமான மனம். வாழ்வில் மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகள் அனைத்தும் விஷயத்தைத் தலைகீழே புரிந்துகொள்வதால் ஏற்படுவதே.

சர்க்கார் பணம் அச்சடிக்க கணக்குண்டு. ஒரு ரூபாயும் மேலே அடிக்க உத்தரவில்லை. ஆஸ்ப்ரினுக்கு தலைவலியைக் குணப்படுத்தும் சக்தியில்லை. வலியை உணராத அளவுக்கு தலையை மறுக்கச் செய்யும். ஊசி போட்டால் வியாதிபோகும் என்று பட்டிக்காட்டு மனிதரிடையே முழு நம்பிக்கை நிலவுகிறது. பட்டம் பெற்றால் அறிவு வரும். அதனால் பண்பு வாராது. பண்பு பிறப்பில் வந்தது. கெட்டிக்காரன் சாதிப்பான். நல்லவனால் முடியாது. நாம் தெய்வத்திற்குச் சேவை செய்ய வேண்டும். நம் தேவைகளைப் பூர்த்திசெய்வது தெய்வத்தின் கடமையன்று. மனிதன் நல்லவனாக இருக்கப் பிரியப்படுவதில்லை. நல்லவன் என்று பெயரெடுக்கப் பிரியப்படுவான்.

பூரணயோகத்தின் முக்கியமான அடிப்படைகளில் ஒன்று:-

**அறிவு உள்ளதை உள்ளபடி புரிந்து கொண்டால் மரணம் உள்பட அனைத்து பிரச்சினைகளும் விலகும்.**

ஒரு 15, 20 பேருக்கு - மேல்நாட்டவர் - மஞ்சள்காமாலை வந்தது. ஊரில் இவர்களைச் சார்ந்த டாக்டர்கள் 16 பேர். பல நாட்களாகியும் வியாதி எவருக்கும் குணமாகவில்லை. எனவே டாக்டர்களை மாற்றிப் பார்த்தார்கள். பலன் தெரியவில்லை. ஒரு டாக்டர் என்ன சாப்பிடுகிறீர்கள் என விசாரித்து பப்பாளிப்பழம் சாப்பிடவேண்டாம் என்றார். “மஞ்சள் காமாலை” குணமாயிற்று.

பப்பாளிப்பழம் சாப்பிடுவதால் மஞ்சள்காமாலை சின்னங்கள் தெரிகின்றன. மேல்நாட்டார், டாக்டர்கள், அதை மஞ்சள் காமாலை என்று முடிவு செய்து சிகிச்சை செய்தனர்.

**ஜடமான மனம் விஷயங்களைத் தலைகீழே புரிந்துகொண்டு இல்லாத பிரச்சினைகளை உற்பத்தி செய்கிறது என்கிறார் பகவான்.**

❊ ❊ ❊



**"அன்பர் உரை"**

# புது மில்லனியத்தில் (millennium) புதைந்துள்ள பொக்கிஷங்கள்

*(தர்மபுரி தியான மையத்தின் நான்காம் ஆண்டு துவக்க விழாவில் 9.1.2000 அன்று செல்வி. R. மகேஸ்வரி நிகழ்த்திய உரை)*

இறைவன் வரும் தருணம் (**Hour of God**) சிருஷ்டிக்கே வந்த நேரம் பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவதாரம். சூரியோதயம், மாதப்பிறப்பு, வருஷப்பிறப்பு, நூற்றாண்டு, மில்லன்னியம் பிறப்பவை இறைவன் வரும் தருணத்தின் சிறு பிரதிபலிப்புகள். அவை வாழ்வு முழுவதும் பலவகைகளில் தொடர்வதைக் காணலாம். திருமணநாள் ஆண்டுநிறைவு, ஸ்தாபன ஆண்டு நிறைவுகள் என ஆயிரம் சிறப்பான நேரங்கள் எழுவதும், நாம் அவற்றைக் கொண்டாடுவதும், 2000 **AD** இல் மகுடமாக மிளிர்கிறது.

ராஜா மாறினாலும் என் வேலை மாறப்போவதில்லை எனக் கசந்துகொண்ட தொண்டன் கூற்றில் பேருண்மையுள்ளது. ராஜ்யம் மாறுவது, புரட்சி, புதுயுகம் பிறப்பது, புதுவசதிகள் ஏற்படுவது ஆகியவை ஏற்கனவே அதிக வசதியுள்ளவர் மேலும் அதிக வசதிபெற உதவும் என்பது உண்மை. காங்கிரஸ் பிரிட்டிஷாரை எதிர்த்து சுதந்திரம் பெற்றபின் எளிய காங்கிரஸ் தொண்டர்கள் சுதந்திரத்தால் உயர்ந்தது உண்மை எனினும் அது ஒரு பகுதியே. ஜமீன்தாரர்களும், சர் பட்டம் வாங்கியவர்களும், பிரிட்டிஷாரை அண்டி வாழ்ந்தவர்களும், சுதந்திரத்தை எதிர்த்தவர்களும் பெருவசதிபெற்றதும் அதுபோன்ற உண்மை. சண்முகம் செட்டியார், சி.பி.ராமசாமி அய்யர், சுப்பராயன், ஜான் மத்தாய் போன்றவர்க்கும், ராதாகிருஷ்ணன் போன்றவர்க்கும் சுதந்திரம் அதுவரை இல்லாத வாய்ப்பை அளித்தது. மில்லன்னியம் ஜனவரி முதல்தேதி பிறந்தால் அதேபோல் ஏற்கனவே படித்தவர், பதவியில் உள்ளவர், பணம்பெற்றவர் சாதாரண மக்களைவிட பெரு வாய்ப்புப் பெறுவர். மில்லன்னியத்தில் மேலும் ஓர் வாய்ப்புண்டு.

இதுவரை சாதாரண மக்கள் பெறாத வாய்ப்பு அது. அன்னை அனுதினமும் வாய்ப்பாகச் செயல்படுபவர். அன்னையை அறிவதால் மட்டும் இந்நேரம் பெருவாய்ப்புப் பெறமுடியும்.

அன்னையை அறிவதால் எளியவர் சிறந்தவராகிறார். அக்காரணத்தால் இந்த நேரம் அவர் பெருமக்கள் பெறுவதுபோல் பெறக்கூடும். இதுவரை அன்னையிடமிருந்து பெறத் தவறியதை அன்பர்கள் பெறும் தருணம் வருஷப்பிறப்பு. அப்படி அவர்கள் பெறக்கூடியது என்ன? அதற்காக அவர்கள் செய்ய வேண்டியது என்ன? சுமார் 20 அல்லது 30 வெளியீடுகளில் பல கண்ணோட்டத்தில் விளக்கமாக எழுதப்பட்ட கருத்துகள் அவை என்றாலும், நேரம் கருதி மீண்டும் ஒரு முறை குறிப்பாகச் சொன்னால்,

* தன் நேர்மைக்கும், திறமைக்கும், அம்சத்திற்கும், அதிர்ஷ்டம் வரவில்லை என நினைப்பவர் எதைப் பெற வேண்டும் என விழைந்தாரோ அதைப் பெறலாம். அதுவே குறைந்தபட்சப் பலன். ஏனெனில் இது அவர் நிர்ணயம் செய்த முடிவு. அன்னை அவருக்கு அளிக்கக்கூடியது அதிகபட்சம். அதை அவரால் நிர்ணயம் செய்யமுடியாது. அன்னையை அறிந்து, அறிவதை நம்பி, நம்புவது செயல்பட தடையானவற்றை விலக்கினால் அது பலிக்கும்.

* அன்னையை என்னவென்று அறிவது? தெய்வமாகவும், அவதாரமாகவும், சக்தியுள்ள தெய்வமாகவும் அறிவோம். தெய்வங்களிடமில்லாத சக்தி அன்னையிடமிருப்பதை, அது நம் வாழ்வில் பலித்திருப்பதை, அச்செயல் என்ன தத்துவத்தை விளக்குகிறது என அறிவது, அன்னையை அறிவதாகும். அதை நம்பினால், இத்தருணம் அந்நம்பிக்கையை நிரந்தரமாக்கும். நம்பிக்கை பூரணமானால் நிரந்தரப் பலனுண்டு. இல்லையேல் உள்ள நம்பிக்கைக்கு ஒரு பெரும் பலன் இந்த நேரம் உண்டு.

நேரு நினைவுச்சொற்பொழிவில் இந்தியா 134ஆம் இடத்திலிருந்து 50ஆம் இடத்திற்கு வர முடியும். அதற்கான திட்டங்களும்,



நுணுக்கங்களும், பணத்தை உற்பத்தி செய்யும் திறனும் நம்மிடம் உண்டு என்று பேச்சாளர் பேசினார்.

நம் இடுப்பை ஒடிப்பது வெளிநாட்டுக் கடன். அதை இனி வாங்குவதில்லை என்றால் தன்னம்பிக்கை பிறக்கும். உள்ள திட்டங்களை ஆண்டவனின் வேகத்தில் நிறைவேற்ற அவசரச்சட்டம் வேண்டும் என்றும் கூறினார் பேச்சாளர். இதைச் செய்தால் நாடு ஸ்பெயின், மெக்சிகோ, கொரியா போல் முன்வரும்.

### அதற்குரிய நேரம் இதுவே. மில்லன்னியம் பிறப்பே.

நம்முடனிருந்தவர் ஒருவர் **M.P.** ஆகவும், அடுத்தவர் கோடீஸ்வரராகவும், வேறொருவருடைய 5 பிள்ளைகள் அமெரிக்காவிலிருக்கும் பொழுது நாம் **NGO** வாக இன்னும் 7 ஆண்டில் ஓய்வு பெறப்போகிறோம். 3 பேரில் ஒரு பிள்ளை பட்டம் பெற்று அதற்குரிய வேலையின்றி சிறு வேலையிலிருக்கிறான். அடுத்தவன் வியாபாரம் செய்து கைநிறைய சம்பாதிக்கிறான். மூன்றாம் பெண் திருமணத்திற்கு நிற்கிறாள் எனில் நாமும், நமக்குரிய ஞானத்தைப்பெற்றால், அதற்குரிய தூய்மையை ஏற்றால் நம் பிள்ளையின் வியாபாரம் கடல் கடந்து பெருகும். வேலையில் உள்ளவன் **IAS** பாஸ் செய்வான். கற்பனைக்கெட்டாத சம்பந்தம் வரும். அவற்றையெல்லாம் பெற நாம் எப்படி அன்னையை அறிய வேண்டும்?

சில லட்சம் வியாபாரம் செய்தவர், சமாதிதரிசனம் செய்து தொழிலைப் பல கோடியாக மாற்றியதை நாம் அறிவோம். நம் வியாபாரம் அதுபோல் பெருக வேண்டும் என்பது ஆசை. ஆசை பலன் தாராது. அவருக்கு அருளியதுபோல் அன்னை நமக்கும் அருள்வார் என்பது ஆசையில்லாவிட்டாலும், எதிர்பார்ப்பதாகும். எதிர்பார்த்தால் எதிர்மறையாக நடக்கும். அவருக்கு அருளியதுபோல் அன்னை அனைவருக்கும் செய்யக் கூடியவர் என்பது அறிவு. அதை நம்புவது நமக்கும் பலிக்கக்கூடிய நம்பிக்கை. அனைவருக்கும் வருகிறது என்பதை ஏற்கும் மனம் பரந்த மனம். பரந்த மனப்பான்மையின் அறிவு பலன் தரும் நம்பிக்கை.

கல்லூரியில் சேர்ந்து முதல் பரீட்சை எழுதிய மாணவன் பரீட்சையில் 100 மார்க் வாங்கியதைக் கூட்டிப் பார்த்தான். கூட்டல் 140 என்கிறது. எப்படி? இதுவரை பள்ளியில் அவனறியாத அனுபவம். 2/3 கேள்விகட்கு 100 மார்க் என்பது கணிதச் சட்டம். முழுவதும் எழுதியவனுக்கு 140 வரும். ஆனால் 100 என்றே போடுவார்கள். கணிதம் கடினமானது என்பதால் இந்த ஏற்பாடு. பையன் திறமைசாலி என்பதால் 140உம் பெற்றான். அன்னை 100க்கு 140 மார்க் போடுபவர்கள். திறமையுள்ளவர் பெறலாம். இது அதைப் பெறும் நேரம். கேட்டதைவிட அதிகமாக அன்னை கொடுக்கிறார் எனில் அவர்கள் கொடுக்க ஆன்மீகச் சட்டம் இதுபோல் இடம் தருகிறது.

கிராமத்திற்குப் பள்ளியை அவர்கள் கேட்காதபொழுது சர்க்கார் அளிக்கிறது எனில் கிராமம் கல்வி பெறுவது சர்க்காருக்கு அவசியம். கிளார்க் வேலைக்குப் போனவன் ஆபீசராகச் செலக்டாகிறான் எனில், அன்பனின் வாழ்வு ஆன்மீக முன்னேற்றம் பெறுவது அன்னைக்கு அவசியம் என நாம் அன்னையை அறிய வேண்டும். பெண்ணுக்குத் திருமணமாகாது என்ற நிலையில் பிரார்த்தனைக்குப் பதிலாக உயர்ந்த வரன் வந்தது. 1 வருஷத்தில் அவருக்கு US இல் வேலை கிடைத்தது என்பது US இல் இந்தியத் திறமைக்குத் தேவையிருக்கிறது எனப் பொருள். நமக்குக் கேட்கத் தெரியாத பலன்களை நமக்கு அருளாகக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளவர் அன்னை என அறிவது, அன்னையை அறிவதாகும். இவற்றை அறிந்தபின் நம்பும் திறமை அறிவுக்கில்லை. சூரியன் உலகைச் சுற்றி வரவில்லை. பூமி உலகத்தைச் சுற்றி வருகிறது என்று அறியும் திறன் புலன்களுக்கில்லை என்பதுபோல், அன்னையைப்பற்றி அறிந்தவற்றை நம்பும் திறன் மனதிற்கில்லை. பூமி சூரியனைச் சுற்றி வருவதை அறிவால் மட்டுமே நம்ப முடியும் என்பதுபோல் அன்னையை இதுபோல் நம்ப ஆன்மாவால் மட்டுமே நம்ப முடியும்.

* அறிவு அனுபவத்தால் பெற்ற விளக்கத்தை,
* ஆன்ம விழிப்பால் நம்பி,
* ஜீவன் தன் முழுமையால் நம்பிக்கையின் பலனைப்பெற



முனைவது இறைவன் வரும் தருணத்தில் நம் கற்பனையின் உச்சகட்ட எதிர்பார்ப்பை அடைவதற்கு வழியாகும்.

* ஆயிரம் ஆண்டுக்கு ஒரு முறை வரும் நாள் முதல்தேதி.
* அதுவே நூற்றாண்டு பிறக்கும் நாளாகவும் இருப்பது மேலும் சிறப்பு.
* இறைவன் வரும் தருணத்தில் இவையிரண்டும் அருளின் அனுக்கிரஹம்.
* நாடு விழித்தெழுந்தால் உலகில் வளமான நாட்டுக்குச் சமமாக உயரலாம்.
* மனிதன் விழிப்படைந்தால் ஆயிரம் மடங்கு உயரலாம்.
* மனிதனின் ஆன்மா விழிப்புற்றுச் செயல்பட்டால் அவன் செய்யும் எந்த யோகமும் பூரணமடையும்.
* பூரணயோகி, அன்னையை அறிந்து நேரத்திற்குரியவாறு செயல்பட்டால் பூரணம் பெறுவான்.
* அன்னை அன்பன், அன்னையை அறிந்து, ஆன்மவிழிப்பால் அன்னையை நம்பி, யோகத்தை நாடினால், வாழ்வு பூரணம் பெற முயன்றால் யோகம் வாழ்வை விளக்கும். அது இதுவரை மனித கற்பனையைக் கடந்த நிதர்சனமாக இருக்கும் என்பதைக் காணும் நாள் ஜனவரி முதல்தேதி.

❊ ❊ ❊

## இம்மாதத்தில் வரும் தரிசன நாள்

ஏப்ரல் 24 அன்னை பாண்டிக்கு நிலையாக தங்க வந்த நாள்

# அன்பர் கடிதம்

**இனிய அன்னைக்கு,**

நீங்கள் எங்களிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கவில்லையென்றாலும் எங்களுடைய கடமையாக நன்றியைச் சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.

என்னுடைய மாமனார் 84 வயதில் மே மாதத்தில் மாடியில் மதில் சுவரின் மேலிருந்து கீழே விழுந்துவிட்டார். இதனால் இடுப்பிலுள்ள பந்துகிண்ண மூட்டெலும்பு விலகி எலும்பு முறிவு ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு எவர்சில்வர் தகடு ஆப்பரேஷன் மூலம் பொருத்தப்பட்டது. எலும்பு சேர்வதில் பிரச்சினை இல்லையென்றால் எந்தவொரு குழப்பமும் ஏற்பட வழியில்லை என்று டாக்டர்கள் கூறினார்கள். வீட்டிற்கு அழைத்து வந்தபிறகு பார்த்தால் தம் நினைவை, ஞாபக சக்தியை இழந்தது தெரியவந்தது. தொடர்ந்தாற்போல் நாள் முழுவதும் சம்பந்தம் இல்லாமல் ஏதோ ஒன்றை பேசிக் கொண்டேயிருந்தார். அவருடைய மகன்கள் இதைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் பொறுமையை இழந்து கொண்டிருந்தனர். மனித மனம் இப்பிரச்சினையிலிருந்து தீர்வு விரைவில் கிடைக்கவேண்டும், அவருடைய கடைசி காலம் நல்லபடியாக இருக்கவேண்டும் என்றே எதிர்பார்த்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுடைய போட்டோ ஒன்று அவர் படுக்கையின் எதிர்ப்புறத்தில் அவருக்குத் தெரியும்படியாக வைத்திருந்தோம். அன்னை மட்டுமே இதைச் சரி செய்ய வேண்டும், முடியும் என்ற பிரார்த்தனை மட்டும் தொடர்ந்தது. அவரின் உடல் உபாதையும், மனக் குழப்பமும் சேர்ந்து வயதான காலத்தில் அவர் சிரமப்பட்டது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆனால் நம்பிக்கை மட்டும் தளரவில்லை. யாருமே அவர் திரும்பவும் பழைய நிலைக்கே திரும்பி விடுவார் என்று எதிர்பார்க்கவில்லை. கடைசி காலம் சிரமமில்லாமல் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டுமே இருந்தது. புதியதாக



எந்தவொரு மருந்தோ, சிகிச்சை முறையோ கொடுக்கவில்லை. தினமும் குளியலும், சாப்பாடும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தன. ஒரு சிறு விதை முளைத்துச் செடி வளர்வது போன்ற மாற்றம் தென்பட ஆரம்பித்தது. அவரின் நிலையில் ஏற்பட்ட முன்னேற்றங்களை படிப்படியாக எழுத வேண்டுமெனில் இச்சிறு கடிதம் போதாது. ஒரு நாள், என் மாமனார் முழுவதுமாக ஞாபக சக்தியும், எழுந்து நடக்கவும், கோர்வையாகப் பேசவும், தம் வேலைகளைத் தாமே செய்து கொள்ளக்கூடிய அளவிற்குச் சக்தியும் பெற்றார்.

எங்களின் பிரார்த்தனையை ஏற்று அவரைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தீர்கள். எல்லோருடைய துன்பங்களும் முழுவதுமாக நீங்கி நிம்மதி கிடைத்தது. உங்களின் ஆசி மட்டுமே இதைச் சாதித்தது எனலாம். எங்கள் உணர்ச்சியை முழுவதுமாகச் சொல்வதற்கு எங்களிடம் வார்த்தைகள் ஏதும் இல்லை. எங்களின் நன்றியைச் சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.

❋ ❋ ❋

***அருள் செயல்பட்ட வகையை அறிவது ஞானம், உணர்வது பக்தி.***

ஆசிரியர்

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சைத்தியபுருஷன் ஆன்மாவாகும். இது நினைவின் உறைவிடமான மனமாகச் செயல்பட முடியும். பூர்வ ஜென்ம ஞானமும் இதற்குண்டு. இதற்குச் செயல் திறனில்லை, நினைவு, அறிவு, வழிகாட்டும் திறனுண்டு. முடிவு, செயல், அதிகாரம் இதற்கில்லை.

"அனுபவக் கட்டுரை''

# அன்பர் அனுபவம்

### மலர்களைப் பற்றிய என் அனுபவங்கள்:

இக் கட்டுரையை ஆரம்பித்த விதத்திலேயே, அன்னை தம் சக்தியை உணர வைத்து எழுத வைத்துள்ளார். ஏனெனில் கட்டுரையை ஆரம்பிக்கும்பொழுது வீட்டில் current இல்லை. அதனால் current வந்த பிறகுதான் எழுதவேண்டும் என்ற நோக்கத்துடன், அன்னைக்கு ரூ.5.00 காணிக்கை எடுக்க பர்ஸில் கை வைத்துப் பணத்தைக் கையில் எடுத்ததும் current வந்து விட்டது. என் மனம் முழுவதும் சந்தோஷமும், அமைதியும் பொங்க என் கண்ணில் கண்ணீர் மல்க என் காணிக்கையை அன்னைக்குச் செலுத்திவிட்டு, எல்லா உண்மையான பிரார்த்தனைகளையும் அன்னை நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்தேன். இதையே என் முதல் அனுபவமாகக் கொண்டு, இந்த அனுபவக் கட்டுரையை எழுத ஆரம்பிக்கிறேன்.

### அன்னை எனக்கு அறிமுகமாகிய விதம்

1992-ஆம் ஆண்டு அன்னை எனக்கு அறிமுகமானார். அதற்குமுன் நான் அன்னையைப் பற்றி மங்கையர் மலரில் வெளியான “வாழும் மகான்கள்” கட்டுரையில், கமலி ஸ்ரீபால் அவர்கள் எழுதியிருந்ததைப் படித்தேன். அது எப்போது என்று சரியாக நினைவில்லை. அப்போதிலிருந்தே அன்னையின் மேல் எனக்கு ஒரு ஈர்ப்பு வந்தது. என் வழக்கமான சோம்பேறித்தனத்தால் அதைப் பற்றி மேலும் அறிய நான் ஆர்வம் காட்டவில்லை. இந்நிலையில் ஒரு நாள் என் மகன் படிப்பு விஷயமாக என் சிநேகிதி வீட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது அவர்கள் வீட்டில் ஸ்ரீ அன்னையின் படம் வைத்து மலர்களை அழகாக அடுக்கி வைத்திருந்தார்கள். நான் அவர்கள் மூலமாக அன்னையைப் பற்றி மேலும் விவரமறிந்து கொண்டேன். அவர்களிடமிருந்து ஒரு blessing packet-உம் கேட்டு



வாங்கிக் கொண்டேன். அவர் எங்கள் வீட்டுக்கு இரண்டு block தள்ளி இருக்கிறார். அவர் என்னை அன்னை அன்பர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். என் சிநேகிதி வீட்டுக்கு நேர் எதிர் வீடு தான் அவர்களின் வீடு. என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்களும் சந்தோஷமாக அன்னையை ஏற்றுக்கொள்ள நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரிவாக எனக்கு விளக்கினார்கள். நானும் எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவர் எனக்குப் பல உதவிகள் செய்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, எங்கள் தெருவிலேயேதான் வசித்து வந்தார். அவர் பாண்டியில் செட்டில் ஆவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்புதான் எனக்கு அறிமுகமானார். காலந்தாழ்ந்து அவரிடம் சென்றதில், இவ்வளவு நாள் இவரைச் சந்திக்கவில்லையே என்ற மனவருத்தம் எனக்கு நீண்டநாள் இருந்தது.

### அன்னையால் நான் பெற்ற அனுபவங்கள்

என் கணவர் திரு. மணவாளன் அவர்களின் engineer பிரமோஷனுக்காக நான் அன்னையிடம் மிகவும் வேண்டிக் கொண்டேன். இது நல்லபடியாகக் கிடைக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் நான் அன்னை அன்பரிடம் கேட்டேன். அப்போது அவர் உங்கள் promotion-ஐ அன்னையிடம் surrender செய்யுங்கள். Recommendation மேல் எல்லாம் நம்பிக்கை வைக்காதீர்கள். அப்படி recommendation தானாக வந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார். ஆனால் என் மனதில் அன்னையைவிட அப்போது recommendation மேல்தான் ஈடுபாடு அதிகமாக இருந்தது. அதனால் என் தங்கையின் மூலம் வந்த recommendation-ஐ என் மனம் மிகவும் நாடியதால் இறுதியில் அது கூடிவாராமல் போனது. நான் செயல்பட்டவிதம் சரியில்லை என்று அவர்கள் சூட்சுமமாக எனக்கு உணர்த்தினார்கள். நானும் அதை ஏற்றுக்கொண்டு என் அறியாமையிலிருந்து சற்று விடுபட்டேன்.

அன்னையிடம் நான் கொண்டுள்ள தீவிரப் பற்றினால் ஏற்பட்ட நன்மைகளையும் இங்கு நான் சொல்ல விரும்புகிறேன். அன்னை அன்பர் இராணிப்பேட்டையை விட்டு, பாண்டிச்சேரிக்குச் சென்றபின்,

இராணிப்பேட்டையில் தியானம் நடத்த பொதுவான ஓர் இடம் கிடைக்கவில்லை. அதுவரை தியானம், அன்னை அன்பர் வீட்டில் நடைபெற்று வந்தது. அவர் பாண்டி சென்ற பின் அந்த சேவை விட்டுப் போகக் கூடாது என்று சில அன்பர்களின் வீட்டில் தியானம் ஏற்பாடு செய்திருந்தார். அவர் இராணிப்பேட்டையில் இருக்கும்வரை இதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்திருந்தார். ஆனால் அன்னையின் விருப்பம் அவர் பாண்டிச்சேரியில்தான் இருக்க வேண்டும் என்று இருந்தது. அப்போதும் அவர் இந்த இடத்தின் மேலும், அன்பர்கள் மேலும் வைத்திருந்த ஈடுபாட்டின் காரணமாக, “இந்த இடத்தை விட்டுப் போனபின்னும் இராணிப்பேட்டைக்குப் பொது இடம் வேண்டும்” என்ற எண்ணம் அவருக்குத் தீவிரமாக இருந்தது. இது எனக்கு நன்கு புரிந்தது. ஒருமுறை தரிசனத்திற்கு நான் பாண்டி சென்றபோது, இதைப்பற்றி என்னிடம் அவர் கூறியபோது, என்னையும் அறியாமல் நான் முயல்கிறேன் என்று வாக்களித்து வந்தேன். அதற்கு அவரும் உங்கள் முயற்சி **sincere**-ஆக இருந்தால் கண்டிப்பாகப் பலிக்கும் என்று கூறினார். வீட்டுக்கு வந்த பிறகு ஓரிரு நாட்கள் வீட்டு வேலையில் அதை மறந்திருந்தேன். ஆனால் அடிக்கடி ஞாபகம் வரத்தான் செய்தது. மூன்றாவது நாள் என் கணவர் ஒரு நண்பர் (அன்னை விஷயமாக அறிமுகமானவர்) வீட்டுத் திருமணத்திற்குச் செல்ல அரை நாள் லீவு எடுத்திருந்தார். அன்று என் மனம் அன்னை அன்பருக்கு வாக்களித்ததை எண்ணி அடிக்கடி சொல்லிக் காட்டிக் கொண்டே இருந்தது. என்னால் ஒரு **level**-க்கு மேல் இந்த எண்ணத்தைத் தாங்க முடியவில்லை. சீக்கிரமாக வேலையை முடித்துவிட்டு, என் மகனுக்குப் பள்ளியில் கேரியர் கொடுத்துவிட்டு, என் கணவர் வந்ததும் என் நிலைமையை விளக்கினேன். “மதியம் இன்னும் அரை நாள் லீவு போடுவதற்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் நீ எங்குப் போவாய்? யாரைக் கேட்பாய்?” என்று கேட்டார். நான் தீர்மானமாக, “கண்டிப்பாக இது முடியும்” என்று மட்டும் கூறினேன். ஒரு அன்னை அன்பர் தியான மையங்கள் எந்தெந்த இடங்களில் நடைபெறுகின்றன என்று சொற்பொழிவு ஆற்ற வந்தபோது கூறினார். அதுவே எனக்கு **idea**



கிடைக்கச் செய்தது. அதை வைத்துக்கொண்டு வெளியில் பள்ளிகளில் **try**-பண்ணலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் டவுன்ஷிப்பில் அன்பர் இருந்தவரை, எல்லாப் பள்ளிகளிலும் கேட்டுப் பார்த்தார். ஆனால் அதற்கு **permission** கிடைக்கவில்லை. அதனால் எங்கள் காலனியை விட்டு வெளிப் பள்ளிகளில் முயலலாம் என்று தோன்றியது. முதலில் டவுன்ஷிப்புக்கு அருகில் உள்ள **SIPCOT**-இல் உள்ள **CSI** பள்ளியின் கரஸ்பாண்டன்டாகவிருந்த ஒரு டாக்டரை பார்க்கச் சொன்னார். நாங்களும் அவர் வீட்டுக்குச் சென்று பார்த்தோம். அவர் இடம் தருவதில் தமக்குள்ள பிரச்சனையை எடுத்துச் சொல்லி இது தன்னால் மட்டும் முடியாது என்று கூறி, அவர் வீட்டுப் பக்கத்து வீட்டில் உள்ள **Lions club secretary** ஐப் பார்த்து உதவி கேட்டால் அவர் உதவுவார் என்று கூறினார். நாங்கள் அவர்களைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னதும், மறு வார்த்தை எதுவும் பேசாமல் எங்களை அரசினர் சீர்திருத்தப் பள்ளிக்கு அழைத்துச் சென்று அதன் **superintendent** அவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள், “பள்ளி பிள்ளைகளும் இதில் கலந்து கொள்ளலாமா?” என்று கேட்டார். நாங்கள் சரி என்று சொன்னவுடன் சம்மதித்தார். பிறகு இவ்விஷயத்தை அன்பருக்குத் தெரிவித்தோம். இராணிப்பேட்டை தியான மையத்துக்கான இடத்தை அன்னை இரண்டு மணி நேரத்திலேயே கிடைக்கச் செய்துவிட்டார். **Hall** மிகவும் அருமையாக இருந்தது. சுமார் 400 பேர் உட்காரும் அளவுக்கு பெரியது. **Fan**, லைட் வசதிகளுடன் மைக் வசதியும் இருந்தது. அதற்குப் பிறகு அன்னை அன்பர் அவர்கள், நாங்கள் (இராணிப்பேட்டை அன்பர்கள்) எப்படி **service** செய்ய வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தங்கள் கைப்பட எங்களுக்குக் கடிதம் எழுதினார். அவர்கள் எங்களுக்கு எழுதிய ஒரே கடிதம் அதுதான். நாங்கள் எங்கள் வாழ்வில் பெற்ற மிகப் பெரிய பொக்கிஷமாக அந்தக் கடிதத்தை இன்றளவும் பாதுகாத்து வருகிறோம். நான் ஏற்கனவே சொன்னபடி ஓர் அன்பர் அன்னை எதற்காக **promotion** கொடுக்காமல் எங்களை இந்த இடத்திலேயே இருக்கச் செய்திருக்கிறார் என்று சொன்னதை நினைத்துப்

பார்த்தபொழுது மிக்க ஆச்சரியமாக இருந்தது. இதிலிருந்துதான் எங்களுக்கு **promotion** கிடைக்கவில்லையானாலும் அன்னை எல்லாவற்றுக்கும் மேலாக எங்களை அவருக்கு **service** செய்ய இந்த இடத்திலேயே இருக்கச் செய்திருக்கிறார் என்ற உண்மை விளங்கியது. அன்னையின் ஆசிகளோடு, இன்றளவும் மாதந்தோறும் இராணிப்பேட்டையில் அன்னைக்காக **service** நடக்கிறது.

எனக்கும் என் கணவருக்கும் செடிகளிடத்திலும், மலர்களிடத்திலும் மிகவும் பிரியம் அதிகம். அன்னைக்காக மலர்கள் சேகரிப்பதில் மிகவும் சந்தோஷம். அதிகாலை 4 மணிக்கே, நானும் அவரும் எழுந்து வெளியே சென்று மலர்களைச் சேகரிப்போம். சில வீடுகளில் கேட்டும், சில வீடுகளில் கேட்காமலும் மலர்கள் எடுத்துக் கொண்டிருந்தோம். ஒரு நாள் பூ பறித்துக் கொண்டிருக்கும் போது என் கணவரின் மேல் பாம்பு ஒன்று மரத்தில் இருந்து விழுந்துவிட்டது. அவரும் ஏதோ செடியிலிருந்து (குவளைப் பூச் செடி) காய்தான் விழுந்துள்ளது என்று கீழே பார்த்தால் பாம்பு ஓடிக்கொண்டிருந்தது. நல்லவேளை அன்னையின் அருளால் ஒன்றும் ஆகவில்லை. இதைப்பற்றி அன்னையிடம் மிகுந்த பக்தியுள்ள அன்பர் ஒருவரிடம் கேட்டதில், வீடுகளில் மலர்கள் சேகரிக்காதீர்கள் என்று அறிவுரை கூறினார். அதை அன்னையின் அறிவுரையாக ஏற்று எங்கள் வீட்டு மாடியிலேயே மலர்ச்செடிகளை சேகரிக்க ஆரம்பித்தோம். வெளியே சென்று மலர்கள் பறிப்பதை அடியோடு நிறுத்தி விட்டோம். இன்று எங்கள் மாடியில், தோட்டத்தில் ஸ்ரீ அன்னையே வசிக்கிறார். அவருக்காக எங்களால் முடிந்த அளவு செடிகளை வைத்து வீட்டிலிருந்தே மலர்களைப் பறித்து வைக்கிறோம். நாங்கள் எங்களின் அதிகமான ஆர்வக்கோளாற்றினால் செய்த தவற்றை ஸ்ரீ அன்னை எங்களுக்கு உணர்த்தி, இன்று வெளியில் கிடைக்காத மலர்ச் செடிகளையெல்லாம் பரிசாகக் கொடுத்திருக்கிறார்.

ஒருமுறை நாங்கள் வெளியில் சென்றிருந்த சமயம் யாரோ இரு சிறுவயதுப் பெண்கள் எங்கள் மாடிக்குச்சென்று (அதுவரை நாங்கள் மாடியைப் பூட்டவில்லை) **gladiolous** செடியை பிடுங்கிச்



சென்று விட்டிருந்தார்கள். செடிகளுக்குத் தண்ணீர் விடலாம் என்று மாடிக்குப் போனால், செடிகளை யாரோ பிடுங்கி எடுத்துக் கொண்டு போயிருப்பது தெரிந்தது. நான் மிகவும் வருத்தப்பட்டேன். அந்த வருத்தம் சொல்லி மாளாது. ஏனெனில் **Bangalore**-இல் இருந்து அதை வாங்கி வைத்து என்ன கலர் என்று பார்க்க ரொம்ப ஆவலாய் இருந்தோம். அன்னைக்காக வாங்கிய செடி காணாமல் போனதால் எனக்கு மனதே சரியில்லை. பக்கத்தில் உள்ளவர்களிடம் யாராவது வந்தார்களா என்று கேட்டதில் அவர்களுக்கும் விவரம் தெரியவில்லை. நான் அன்னையிடம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்தேன். “அன்னையே நீங்கள் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. அந்தச் செடி எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்”, என்று கூறினேன். இரவெல்லாம் மிகுந்த தலைவலி. அந்த கிழங்கின் விலை ரூ.4.00 தான். ஆனால் அன்னைக்கு வைத்திருந்தது திருடு போனதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காலையில் எழுந்தவுடன் மறுபடியும் அன்னையிடம் என் பிரார்த்தனையைக் கூறினேன். எப்படியோ ஆகட்டும் என்று விட்டுவிட்டேன். அன்று மதியம் இரு பெண்கள் எங்கள் வீட்டிற்கு வந்து “எங்களுக்கு செடி வேண்டும், ஏதாவது கொடுங்கள், நேற்று மாலை வந்தோம், நீங்கள் இல்லாததால் சென்று விட்டோம்”, என்று கூறினார்கள். இவர்கள்தான் இந்த வேலையைச் செய்தார்கள் என்று எனக்கு உடனே புரிந்து விட்டது. அவர்களை மதர் இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்று, எதற்காக நாங்கள் செடி வளர்க்கிறோம் என்பதை அவர்களுக்கு உணர்த்தி, “இதைப்போலத் திருடலாமா?” என்று கேட்டேன். அவர்களில் ஒருத்தி உடனே வீட்டுக்குச் சென்று அந்தச் செடியை எடுத்து வந்து தந்துவிட்டாள். நானும் அவர்களுக்கு வேறு **gladiolous** கிழங்குகளும், செடிகளும் தந்து அனுப்பினேன். அன்னையின் சக்தியை நினைத்து மனப்பூர்வமாக என் நன்றியை அன்னைக்குத் தெரிவித்தேன். நான் மிகுந்த பக்தி வைத்துள்ள அன்னை அன்பருக்குக் கொத்தாகப் பூக்கும் **white rose** செடி அளிக்க மிகவும் விரும்பினேன். அந்தச் செடி என்னிடத்திலும், என் நண்பர் வீட்டிலும் இருந்தது. அப்போது எங்களுக்குச் செடி பதியன் போடத் தெரியாது. என் நண்பரும்

அவரே தம் வீட்டில் பதியன் போட்டுத் தருவதாகக் கூறினார். அவர்கள் பதியன் போட்ட செடி எங்களுக்குக் கிடைக்கவில்லை. எனக்கோ அந்த அன்னை அன்பருக்கு எப்படியாவது அதைக் கொடுக்க வேண்டும் என்று விருப்பம். நான் அன்னையிடம் அந்த விருப்பத்தைச் சொன்னேன். ஒரே ஒரு ரூபாய் காணிக்கை வைத்தேன். அன்று மாலை நாங்கள் மாடியில் இருக்கும்போது **Stanes** நிறுவனத்தின் **representative** ஒருவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு வந்தார். அவர் ஆர்க்காட்டில் ஓர் உரக் கடையில் எங்களைச் சந்தித்திருந்தார். மறுபடியும் அவரைப் பார்க்கவில்லை. அவரை மறந்தும் விட்டோம். அவரை யார் என்றும் கேட்டுவிட்டோம். பின்னர் அவரே எங்களை இதற்கு முன்னர் சந்தித்ததின் விவரம் கூறி, செடிகளுக்காக யோசனை சொல்ல வந்ததாகக் கூறினார். எனக்கு மிக்க மகிழ்ச்சி. எங்களுக்கு ஏற்பட்ட எல்லாச் சந்தேகங்களுக்கும் விளக்கம் கேட்டு, **Rose** - பதியன் வைக்கும் முறையைப் பற்றியும் கேட்டோம். அவரும் எங்களுக்கு சொல்லிக் கொடுத்தார். அந்த முறையில் வைத்து 1½ மாதத்திலேயே செடி நன்றாக வளர்ந்து, பூக்கவும் ஆரம்பித்துவிட்டது. அன்னைக்கு என் நன்றியைத் தெரிவித்து, நாம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பூரணமாக இருந்தால் அன்னை நிச்சயம் கொடுப்பார் என்பதைப் புரிந்துகொண்டு அந்தச் செடியை அன்னை அன்பருக்குக் காணிக்கையாகக் கொடுத்தோம். பின்னர் என் பழைய நண்பரும் மறுபடி வந்து பதியன் வைத்துக் கொடுத்தார். ஒரு செடியை அந்த அன்னை அன்பருக்குக் கொடுத்ததால் எங்களுக்கு அதே செடி மூன்றாகியுள்ளது. நாம் கொடுப்பதைப் பெற்றுக் கொள்பவர் மனநிலை உயர்ந்ததானால் கொடுத்தவருக்கு அதைவிடப் பல மடங்காக திரும்பிவரும் என்ற ஆன்மீக உண்மையை அன்னை எங்களுக்கு உணரச் செய்தார்.

என் மூத்த தங்கைக்குத் திருமணம் நிச்சயம் ஆனது. என் பையனுக்குப் பரீட்சை நடந்து கொண்டிருந்ததால் அந்த நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை. மாப்பிள்ளையையும் பார்க்கவில்லை. **B.Sc**.



படித்திருந்தார். ஆனால் வேலை எதுவும் இல்லை. இவ்விஷயம் நான் அறிந்ததும் எனக்கு வேதனையாக இருந்தது. நான் இங்கு **SIPCOT**-இல் வேலை கிடைக்குமா என்று தெரிந்தவர்கள் மூலமாக முயன்றுகொண்டிருந்தேன். இதனால் அந்தப் பிள்ளை அடிக்கடி எங்கள் வீட்டிற்கு (இராணிப்பேட்டைக்கு) வந்து கொண்டிருந்தார். எனக்கு அந்தப் பையனைப் பார்த்ததும் இவர் ஏதோ சரியில்லை என்று மனதுக்குப்பட்டது. என் கணவரிடம் சொல்லி அடிக்கடி புலம்பினேன். "நாம் என்ன பண்ணுவது? உங்கள் வீட்டில் எடுத்த முடிவு", என்று கூறிவிட்டார். திடீரென்று கல்யாணத்திற்கு ஒரு வாரம் இருக்கும்பொழுது, ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு வந்து, தனக்கு மனக் கோளாறு உள்ளதாகவும், அடிக்கடி **mental depression** ஏற்படுவதாகவும், அந்த நேரத்தில் தான் என்ன செய்கிறோம் என்று தனக்கேத் தெரியாது என்றும் ஒரு முறை கிணற்றில் விழுந்து காலில் கூட அடிபட்டிருப்பதாகவும் கூறினான். எனக்கு ஒரே **shock**. நான் அப்படியே **upset** ஆகிவிட்டேன். அழுகை பீரிட்டுக்கொண்டு வந்தது. தம்பி, தங்கை, அம்மா எல்லோரும் அழுதார்கள். என் தங்கை மாதந்தோறும் இராணிப்பேட்டை தியான மையத்திற்கு வந்து சேவை செய்பவள். அவளுக்குப் போய் "இப்படி ஒரு கதி நேர்ந்து விட்டதே" என்று எனக்கும் இன்னும் வருத்தம் அதிகமாகி விட்டது. கல்யாணத்தை நிறுத்தி விட்டோம். அந்தப் பையனின் தந்தையை அழைத்துப் பேசி உண்மையை எழுதித் தருமாறு கேட்டேன். அவரும் அதற்கு இசைந்து என் தங்கையின் மேல் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், தாங்கள் தான் உண்மையை மறைத்ததாகவும் ஒத்துக்கொண்டு எழுதிக் கொடுத்தனர். நாங்கள் செய்த செலவுகளையும் திருப்பிக் கொடுத்தனர். எங்களால் இதைத் தாங்க முடியவில்லை. அடுத்த நாளே பாண்டிக்குச் சென்று அன்னையிடம் அழுது முறையிட்டோம். அன்னையிடம் என் தம்பி இதைப்பற்றித் தெரிவித்தான். அன்னை அன்பர் அவர்கள் நான் எழுதிய கடிதத்திற்குப் பதில் அனுப்பி சில அறிவுரைகளைக் கூறினார். மற்றோர் அன்பரும் எங்களுக்கு அறிவுரை கூறினார். சொசைட்டியிலுள்ள அன்பர் ஒருவர் என் தம்பியிடம், "அன்னை

எல்லாம் நல்லதிற்குத்தான் செய்கிறார்" என்றார். எனக்கு இப்படிப்பட்ட மாப்பிள்ளைதான் வேண்டும் என்று அன்னையிடம் கேட்பதைவிட அன்னையே நீங்கள் எனக்கு எந்த மாப்பிள்ளை அளித்தாலும் நான் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை எனக்குத் தாருங்கள் என்று பிரார்த்தனைச் செய்யச் சொன்னார். அன்னை அன்பரும் இதையேதான் சொன்னார்கள். என் தங்கையும் அதைப் பின்பற்றி எந்தப் பிரச்சனையும் இன்றி எங்களுக்குத் தெரிந்த இடத்திலேயே அதைவிட அழகான, நல்ல மாப்பிள்ளை அமைந்து இப்போது சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி கொண்டிருக்கிறாள்.

எங்கள் வாழ்வில் நடந்த ஒவ்வொரு பிரச்சினைக்கும் என் இனிய அன்னை ஒவ்வொரு விதமாக அருள் புரிந்து அதைச் சரி செய்தார். பொதுவாக மனிதனுக்குரிய நன்றி மறக்கும் குணம் எங்களுக்கு என்றும் இல்லாமல் அன்னையை மறக்காமல் ஒவ்வொரு நாளும் அன்னை எங்கள் வாழ்வில் நிலைக்க வேண்டுமென்று அவரையே வேண்டுகிறேன். ஸ்ரீ அன்னையே சரணம்.

- லீலா மணவாளன், ராணிப்பேட்டை.

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவன் என்ற புதிருக்கு அவனே விடை. வாழ்வில் இறைவன் புதிர். அவனை அடைந்தால் விடை எழும்.





# ஸ்ரீ அரவிந்தரின் கருணை

S. அன்னபூரணி

'அரவிந்த் க்ளினிக்' என்ற பெயர்ப்பலகை பித்தளைத் தகட்டில் பளபளத்தது. அந்த ஆஸ்பத்திரியின் வாசலில் வெள்ளைப் புறா ஒன்று பறந்து வந்து அமர்ந்த மாதிரி, தீப்பெட்டி வடிவில் ஒரு வெள்ளை மாருதி வேன் நின்றது. அதிலிருந்து தூய வெள்ளை உடையில் நன்கு 'பாலிஷ்' செய்யப்பட்ட கறுப்பு ஷுக்கள் அணிந்து கம்பீரமாகக் கீழே இறங்கினார் தலைமை டாக்டர் ரவீந்திரன்.

"குட் மார்னிங் டாக்டர்".

முகம் பார்க்கும் கண்ணாடிபோல் பளபளத்த மொஸைய்க் தரையில் டக்டக்கென்று ஸ்ருதி லயத்துடன் ஷுக்கள் சப்திக்க எதிரில் தென்பட்ட ஒவ்வோர் ஆஸ்பத்திரி ஊழியருக்கும் புன்னகைத்தபடி பதிலுக்குக் காலை வணக்கம் சொல்லியபடி நடந்து சென்று தம் அறையை அடைந்தார். நேராகச் சுவரில் மாட்டப்பட்டிருந்த பகவான் ஸ்ரீ அரவிந்தரின் படத்தை நோக்கிக் கை கூப்பி மனதுக்குள் பிரார்த்தித்தார்.

"ஹே பிரபு! இந்த ஆஸ்பத்திரி என்னுடையதல்ல, தங்களுடையது. இங்கு வேலை செய்யும் ஒவ்வொருவருக்குள்ளும் நீங்கள்தான் இருக்க வேண்டும். வரும் நோயாளிகளை எனக்குள்ளிருந்து நீங்கள்தான் பரிசோதிக்க வேண்டும். இங்கு கொடுக்கப்படும் மருந்துகளில் உங்கள் சக்தி புகுந்து செயல்பட வேண்டும்."

சுழல் நாற்காலியில் சென்று அமர்ந்தவர் மேஜையின் மீதிருந்த மணியைத் தட்டினார். ஸ்பிரிங் டோரைத் திறந்து கொண்டு உள்ளே வந்த அவரது அந்தரங்கக் காரியதரிசி விமலா அவரது பார்வையிலேயே குறிப்பை உணர்ந்து கொண்டு 'குட் மார்னிங் டாக்டர்! எல்லா டாக்டர்களும் தங்களுடைய நோயாளிகளின் நிலைமையைப் பற்றிய குறிப்புகளுடன் தயாராகக் காத்திருக்கின்றனர். உள்ளே வரச் சொல்லவா?' என்றாள் முகமலர்ச்சியுடன். 'குட்' என்ற ஒரு சொல்லிலேயே அவளின் திறமையைப் பாராட்டிவிட்டு 'அவர்களை வரச் சொல்' என்று உத்திரவிட்டார்.

உள்ளே நுழைந்த டாக்டர்கள் இருக்கையில் அமர்ந்தனர். டாக்டர் உமாச்சந்திரன் ‘என் பொறுப்பிலுள்ள வார்டில் எந்தவித ‘எமெர்ஜென்ஸி கேஸும்’ இல்லை. அந்த இருதய நோயாளி இன்று ‘டிஸ்சார்ஜ்’ ஆகிப் போகிறார். ஒரு வாரம் முன்பு ‘அட்மிட்’ ஆன ஆறுமுகத்திற்கு ஜுரம் வெகுவாகக் குறைந்து விட்டிருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களில் வீட்டுக்கு அனுப்பி விடலாம்’ என்றார்.

‘வெரிகுட்’ என்று தம் திருப்தியை தெரிவித்துவிட்டுக் கண்ணாலேயே அடுத்த டாக்டரைப் பார்த்தார்.

‘போன வாரம் ‘ஆபரேஷன்’ ஆன நோயாளியின் புண் நன்றாகக் குணமாகிவிட்டது. இன்று தையல் பிரித்து விடலாம். வேறு முக்கிய ‘கேஸ்’ எதுவுமில்லை’ என்றார் டாக்டர் புருஷோத்தமன்.

இப்படி ஒவ்வொருவராகத் தம் பொறுப்பிலுள்ள நோயாளிகளின் நிலைமையை விவரித்துச் சொல்லச் சொல்ல ஒவ்வொன்றையும் தீவிர அக்கறையுடன் கவனித்துக்கொண்டே வந்த தலைமை டாக்டர் ரவீந்திரன், ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்ய வேண்டிய வேலை களையும், கொடுக்க வேண்டிய மருந்துகளையும் சிறு குழந்தைக்குக் கூடப் புரியும்படி விவரித்துச் சொன்னார். கடைசியாக ‘மிஸ்டர் அருண், நீங்கள்தானே புதியதாகச் சேர்ந்திருக்கும் ‘ஜுனியர் டாக்டர்?’ **All the best!** நீங்கள் சிறிது காலம் சீனியர் டாக்டர்களுடன் இருந்து அவர்கள் மருத்துவம் பார்க்கும் விதத்தைக் கவனித்துக் கொண்டே வாருங்கள்’ என்று கனிவான குரலில் கூறி கை குலுக்கிவிட்டு ‘வழக்கம்போல் பகவானின் கருணையாலும், உங்கள் அனைவரின் ஒத்துழைப்பாலும் தரிசன நாளுக்குப் பாண்டி போய்வருகிறேன்’, என்றார்.

சக டாக்டர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் ‘சார் உங்களுக்கு நல்லபடியாகத் தரிசனம் கிடைக்க எங்கள் வாழ்த்துக்கள். உங்கள் குருவிடம் எங்கள் சார்பாகவும், நம் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் சார்பாகவும் வேண்டிக்கொண்டு வாருங்கள்’ என்றனர் பணிவு கலந்த அன்புடன். **'Sure, sure'** என்று உற்சாகத்துடன் தலையாட்டினார் ரவீந்திரன்.

அவர் அறையை விட்டு வெளியே வந்தவுடன் புதியதாகச் சேர்ந்த அருணுக்கு ஏராளமான சந்தேகங்கள், கேள்விகள். அதற்கு விடை கிடைக்கவில்லையென்றால் மண்டையே வெடித்துவிடும் போலிருந்தது.



‘சார், எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய டாக்டர் கொஞ்சம் கூட ‘பந்தா’ இல்லாமல் பழகுகிறாரே. ஒவ் வொருவரையும் எப்படி அக்கரையுடன் விசாரிக்கிறார், தொழிலில்தான் எத்தனைப் பற்று? அதை விட ஆச்சரியம், சமீபத்தில் வேலைக்குச் சேர்ந்த என் பெயரைக்கூட ஞாபகம் வைத்துக்கொண்டு என்னை வாழ்த்தினாரே. இந்த ஆஸ்பத்திரியின் சூழ்நிலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இது ஆஸ்பத்திரி மாதிரியே இல்லை. ஒரு கோவில் மாதிரி இருக்கிறது. வழக்கமாக வரும் ஆஸ்பத்திரி மருந்து, டெட்டால் நெடியையும் மீறி, ஊதுபத்தி, மலர்களின் வாசனை! அதென்ன டாக்டர் அறைக்கு அறை ஒரு பெரியவரின் படம் வைத்திருக்கிறது. தாடி வைத்திருக்கிறார், பார்ப்பதற்கு ரவீந்திர நாத் டாகூர் மாதிரி இருக்கிறார். அவர் கண்களின் தீக்ஷிண்யம், கருணை மனதை வருடிக் கொடுப்பது போலிருக்கிறது.

டாக்டர் புருஷோத்தமனுக்குச் சிரிப்பு தாளவில்லை.

‘டாக்டர் அருண், உங்கள் சந்தேகம் எனக்கு ஆச்சர்யத்தைத் தரவில்லை. உங்கள் கேள்விகளுக்கு விளக்கம் தருவது என் கடமை. டாக்டர் ரவீந்திரன் பாண்டியில் உள்ள ஸ்ரீஅரவிந்தரின் பக்தர். பாண்டியில் வருடத்தில் முக்கியமான நான்கு தரிசன நாட்கள் உள்ளன. அவை நான்கையும் தவற விடாமல் போய் விடுவார் டாக்டர். மற்றபடி வேறு எங்கும் வெளியூர் போய் பார்த்ததில்லை. அவர் மிகத் திறமையான டாக்டர். அவரை நம்பி எத்தனையோ நோயாளிகள் இருக்கின்றனர். அவர் ஒரு நடமாடும் தெய்வம். வைத்தியம் பார்ப்பதில் அவர் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு பார்ப்பதில்லை. அவரைப் பொருத்தவரை யில் சேவை செய்வதுதான் அவர் குறிக்கோள். அவரைக் கேட்டால் நான் என்ன செய்கிறேன்? எல்லாம் பிரபு அரவிந்தரின் கருணையாலல் லவோ நடக்கிறது. நான் வெறும் கருவிதான்’ என்று பணிவோடு சொல்லிவிடுவார்.

அருணுக்குப் பிரமிப்பாக இருந்தது.

‘சார் இதுவரைக்கும் எனக்கு வாழ்க்கையில் லக்ஷியம் என்று பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை. **One candle lights another** என்பது போல அவருடன் பேசிய நொடியிலேயே அவருடைய **vibration** ஒரு சிறு பொறியாய் வந்து என் நெஞ்சில் பற்றிக்கொண்டுவிட்டது. எனக்கும்

மனித குலத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற தீராத ஆவல் ஏற்பட்டுள்ளது'.

'இந்த ஆஸ்பத்திரிச் சூழ்நிலையில் இருக்கும் எந்த டாக்டருக்கும் இயல்பாக ஏற்படக்கூடிய உணர்வுதான்' என்று சொல்லி நிறைவுடன் சிரித்தார்.

அறைக்குள் டாக்டர் ரவீந்திரனின் எண்ணங்கள் இவ்வாறாக ஓடின. 'இன்று டாக்டர்கள் கொடுத்த "ரிப்போர்ட்" படி பார்த்தால் இரவு கிளம்புவதற்குப் பதிலாக இன்று மதியமே பாண்டி கிளம்பிவிடலாம் போலிருக்கிறதே'.

அவருக்குத் தெரியாது, அவருக்குச் சோதனையாக ஒரு நிகழ்ச்சி நடக்கப்போகிறதென்பது.

'பார்வதி வலி தாங்க முடியவில்லையே' புழுவாய்த் துடித்தார் நடராஜன்.

'என்ன பண்ணுகிறது உங்களுக்கு? இருங்க. நம்ம பாமிலி டாக்டரை அழைத்து வருகிறேன்', டாக்டர் வந்தார்.

'ஏம்மா எப்போதிலிருந்து இந்த வலி?'

'திடீரென்று காலையில் அடி வயிற்றை வலிக்கிறதென்றார். கொஞ்சங் கொஞ்சமாக வலி அதிகரித்து இப்பொழுது வேதனை தாங்காமல் அலறுகிறார். அவர் படும் வேதனை எனக்குச் சகிக்கவில்லை. உடனே ஏதாவது செய்யுங்களேன்' என்றாள் பார்வதி கண்ணீரும் கம்பலையுமாய்.

'இருங்கம்மா அவசரப்படாதீங்க' என்றவர் நடராஜன் வயிற்றில் ஒவ்வோர் இடமாகக் கையை வைத்து 'இங்கே வலிக்கிறதா' என்று கேட்டு வந்தவர் அவர் கீழ் வயிற்றில் கை வைத்தவுடன் அலறிவிட்டார் நடராஜன்.

'ஏம்மா அவர் இன்று **urine** போனாரா?'

நடராஜனே 'இல்லை டாக்டர். கீழ் வயிற்றில் கல்லைக்கட்டி வைத்த மாதிரி வலிக்கிறது'. உடனே டாக்டர் சற்றுக் கவலையுடன் 'அம்மா உங்கள் கணவருக்குச் சிறு நீரகத்தில் கல் இருக்குமென்று தோன்றுகிறது. அவரை உடனடியாக அருகிலுள்ள அரவிந்த் நர்ஸிங்



ஹோமில் சேர்க்க வேண்டும். அவருக்கு ஓர் "எமெர்ஜென்ஸி ஆப்பரேஷன்" செய்ய வேண்டும்'. பார்வதி பயந்து போனாள். நடராஜனோ, 'உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இந்த மாதிரி வலியால் துடிப்பதை விட இறந்துவிட்டால் கூடத் தேவலாம். என் எதிரிக்குக் கூட இந்த நிலை வரக் கூடாது'.

'கவலைப்படாதீர்கள், அங்குள்ள டாக்டர் ரவீந்திரன் மிகவும் கைராசிக்காரர், அவர் எமனிடம் கூடப் போராடி உயிரை மீட்டு வருபவர். நீங்கள் உங்கள் கணவரை அவரிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாகக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருங்கள்'.

வீட்டுக்குச் சென்று மதிய உணவை முடித்துக் கொண்டு பாண்டி கிளம்பிவிட வேண்டும் என்று எண்ணியவாறே டயலைச் சுழற்றினார்.

'மிஸ் விமலா, நான் மதியமே பாண்டிக்குக் கிளம்பலாமென்றிருக் கிறேன், கார் டிரைவரைத் தயாராக இருக்கச் சொல்லுங்கள்'.

'ஐயம் சாரி டாக்டர், இப்பொழுதுதான் உங்களுடன் பேச நினைத்தேன் அதற்குள் நீங்களே முந்திக் கொண்டு விட்டீர்கள். ஒரு அவசர கேஸ் உங்கள் நண்பர் டாக்டர் மோகன் அனுப்பியிருக்கிறார். **Kidney stone case** உடனடியாக "சர்ஜரி" செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். நோயாளி படும் வேதனையைச் சொல்லி மாளாது'.

ஒரு நொடி குழம்பிப் போனார். சட்டென்று இயல்பாகவே அவர் ரத்தத்தில் ஊறியிருந்த சேவை உணர்வும், இரக்க குணமும் முன் வந்து மேற்கொண்டு எதுவும் சிந்திக்காமல் 'நோயாளியை உடனே அனுப்புங்கள்' என்று உத்திரவிட்டார். போன் ரிஸீவரை வைத்த விமலாவுக்கு டாக்டரின் பெருந்தன்மை கண்களைக் கசிய வைத்தது.

அடுத்த ஒரு மணி நேரத்தில் நடராஜன் 'ஆபரேஷன் தியேட்டருக்கு' அழைத்து வரப்பட்டு, சர்ஜரி வெற்றிகரமாக முடிந்தது. மயக்க நிலையில் அவரை 'ஸ்பெஷல் வார்டில்' கொண்டு வந்து சேர்த்தனர். பார்வதி நன்றி உணர்வுடன் டாக்டரை நோக்கி இரு கரங்களையும் குவித்தாள். டாக்டர் ஆறுதலாக அவளைத் தட்டிக் கொடுத்துவிட்டு 'கவலைப் படாதீர்கள் சரியாகிவிடும்' என்று உறுதியளித்துவிட்டுத் தம் அறைக்குத் திரும்பினார். அதுவரையில் தம் கடமையில் குறியாயிருந்ததால் பசி, தாகம் தெரியாமல் இருந்தவர் இப்பொழுதுதான் யதார்த்த நிலைக்குத்

திரும்பினார். காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாததால் ஏற்பட்ட களைப்பு, விடாமல் வேலை செய்த அசதி, இதற்கும் மேலாக மனதின் ஓர் ஓரத்தில் தரிசன நாளுக்குப் போக வேண்டும் என்கிற ஆர்வம் எல்லாம் சேர்ந்து ஒரு நிமிடம் அயர்ந்து போய் மேஜையின் மேல் தலையைக் கவிழ்த்தார். சட்டென்று குளிர்ந்த காற்று வீசவே தலை நிமிர்ந்தவர் திகைத்துப் போனார். தமக்கிருந்த அசதியால் பேனைக் கூடப் போடாமல் துங்கிவிட்டதை உணர்ந்தார். ஒரு டாக்டர் **'fan switch'** ஐ த் தட்டிவிட, மற்றொரு டாக்டர் கையில் பழரசத்துடன் தயாராகயிருந்ததைக் கண்ட அவர் மனம் நெகிழ்ந்து போயிற்று. பழரசத்தை ஆவலுடன் வாங்கிக் குடித்தவர் உடலில் புதுத்தெம்பு ஏற்பட்டது.

'உங்கள் எல்லோரிடமும் நானே பேச வேண்டுமென்று நினைத்தேன். நான் இதுவரை எந்தத் தரிசன நாளையும் தவற விட்டதில்லையென்று உங்களுக்கே தெரியும். இப்பொழுது "சர்ஜரி" செய்யப்பட்ட நடராஜனைப் பொருத்தவரையில் கவலைப்பட ஒன்றுமில்லை. ஆனாலும் இவரை விட்டு விட்டு நான் வெளியூருக்குப் போவது தெரிந்தால் "சைகலாஜிகலாக" பாதிப்பு ஏற்படலாம். ஆகவே அவர் கண் விழித்தவுடன் வலி இருந்தால் என்ன மருந்து கொடுக்கலாம், ஜுரம் வந்தால் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லிவிட்டுப் போகிறேன். ஆனால் தப்பித்தவறிக்கூட நோயாளியிடம் நான் ஊரில் இல்லை என்ற விவரத்தைக் கூறி விட வேண்டாம். அப்படி அவர் என்னைப் பார்க்க வேண்டும் என்று கேட்டால் "டாக்டர் வீட்டுக்குப் போயிருக்கிறார் இதோ வந்து விடுவார்" என்று சொல்லிச் சமாளியுங்கள். நாளை மறுநாள் காலையில் திரும்பிவிடுவேன்'.

அனைவரும் கவனமாகக் கேட்டுக் கொண்டனர்.

காரில் பயணிக்கையில் ரவீந்திரனுக்கு மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது. 'இந்த நிலையில் நோயாளியை விட்டுவிட்டு வருவது நியாயமா?' என்று ஒரு புறம் மனச்சாட்சி உறுத்தியது. மறு புறமோ இதுவரை தரிசன நாளைத் தவற விட்டதேயில்லையே. இந்த முறை மட்டும் ஏன் சோதனை? எது சரி, எது தவறு? நான் இப்போது பாண்டி வருவது சரியா பிரபு? என்று சொல்லியபடி, தம் கைப்பையைக் குடைந்து முந்தைய தரிசன நாட்களின் போது கொடுக்கப்பட்ட **blessing card** ஒன்றை எடுத்தார். அதிலிருந்த வாசகங்கள் அவருக்குப் பதில் கூறும்படியாக **'Abandon all dharmas and take refuge in me, I will relieve you from all your sins'** என்றிருந்தது. இதைப் படித்த பிறகு ரவீந்திரனின் மனக்கலக்கம் அவரை விட்டு நீங்கியது.



பகவானின் சமாதி தரிசனம் அற்புதமாகக் கிடைக்கப் பெற்றார். நீண்ட நேரம் தியானம் செய்தார். தம்மை மறந்தார், ஆஸ்பத்திரியை மறந்தார், நோயாளிகளை மறந்தார், ஆழ்ந்த நிம்மதியுடன் காரில் திரும்பியவர் நேராக வீட்டுக்குக் கூடப் போகாமல் ஆஸ்பத்திரியை நோக்கிக் காரைச் செலுத்தச் சொன்னார். ஆஸ்பத்திரி கட்டிடத்தை நெருங்க நெருங்க அவர் மனதில் தம்மையறியாமலேயே சிறிது பதட்டம் தலை தூக்கியது.

நோயாளி நடராஜனை முதலில் பார்த்து விட்டுத்தான் வீட்டுக்குப் போக வேண்டும் என்று தீர்மானித்து அவர் அறைக்குள் நுழைந்தவர் திடுக்கிட்டுப் போய்விட்டார். படுக்கையில் அவரைக் காணோம், தவறு செய்து விட்டேனா? அவரைக் காணவில்லை என்றால் அவருக்கு ஏதாவது ஆகி விட்டிருக்குமோ? நினைக்கவே திகிலாக இருந்தது. நிச்சயமாக சர்ஜரி செய்யப்பட்ட அவர் எழுந்து நடமாட முடியாது. சற்றே நடை தள்ளாடத் திரும்பியவர் எதிரில் வந்தவரைக் கண்டதும் சிலையாகி விட்டார். ஹலோ டாக்டர் என்று உற்சாகமாகக் கையசைத்தவாறு நோயாளி போலல்லாமல் ஒரு ஆரோக்கியமான தோற்றத்துடன் வெளியிலிருந்து வந்தார் நடராஜன். டாக்டருக்கு தம் கண்களையே நம்ப முடியவில்லை.

'என்ன சார் இது நீங்க இருக்கும் நிலையில் எப்படி எழுந்து நடமாடுகிறீர்கள்? யார் படுக்கையை விட்டு எழுந்திருக்கச் சொன்னது?'

டாக்டரின் குரல் கேட்டு ஆஸ்பத்திரி சிப்பந்திகள் அனைவரும் அங்குக் கூடிவிட்டனர்.

'டாக்டர் நீங்கள் இல்லாத நேரத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. ஆபரேஷன் முடிந்த அன்று இரவில் எனக்கு விழிப்பு ஏற்பட்டது. தாங்க முடியாத வலி, வேதனையால் நான் அலறிய அலறலில் ஆஸ்பத்திரிக் கட்டிடமே இடிந்துவிடும் போலிருந்தது. அதைக் கேட்டு எல்லா டாக்டர்களும் நர்ஸ்களும் கூடி விட்டனர். ஒரு டாக்டர் மருந்தைக் கொடுத்தார். மற்றொருவர் இஞ்சக்ஷன் கொடுத்தார். என்னால் சிறுநீர்

கழிக்க முடியவில்லை. ஆயிரம் குத்தூசிகளால் குத்தப்பட்டதைப்போல அடிவயிற்றை வலிக்க ஆரம்பித்தது. எல்லோரும் என்னைக் கவனித்துக் கொண்ட போதும் நீங்கள் வந்து கவனிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன். நீங்கள் வந்து விடுவீர்கள் என்று சொன்னார் களேயொழிய உங்களைக் காணவே முடியவில்லை. எல்லோரும் தங்களால் முடிந்த உதவியைச் செய்துவிட்டுப் போய்விட்டனர். அப்பொழுது தற்செயலாக என் அறைக்கு வந்த நோயாளி என் உடல் நிலைபற்றி விசாரித்தார். நான் உங்கள் பெயரைச் சொல்லி நீங்கள் வந்து கவனித்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னேன். அதற்கு 'அவர் உங்களுக்குத் தெரியாதா டாக்டர் ரவீந்திரன் தம்முடைய குருநாதரைத் தரிசிப்பதற்காகப் பாண்டி போயிருக்கிறார். அவர் நாளைதான் வருவார்' என்ற தகவலைச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் போனாரோ இல்லையோ எனக்கு துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. என் வலியினால் ஏற்பட்ட வேதனையை விட, இவரை நம்பி வந்த என்னை இவர் இப்படி நிர்க்கதியாய் விட்டுவிட்டுப் போய்விட்டாரே என்ற எண்ணம் கொடுத்த வேதனைதான் அதிகமாக இருந்தது. விம்மி விம்மி அழுதேன். சிறிது நேரத்தில் ஒருவர் வந்தார்

'ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டார்.

'டாக்டர் ரவீந்திரன் எனக்கு ஆபரேஷன் செய்துவிட்டு அவருடைய குருநாதரைத் தரிசிக்க சென்றுவிட்டார். எனக்கு சிறுநீர் கழிக்க முடியாமல் பயங்கர உபாதையால் அவஸ்தைப்படுகிறேன். நான் எவ்வளவு நம்பிக்கை யோடு இவரைத் தேடி வந்தேன் தெரியுமா? இவர் இந்த மாதிரி என்னை அம்போவென்று விட்டுவிட்டுப் போனதை நினைத்தால் உடலின் வேதனையை விட மனம்தான் அதிக வேதனைப்படுகிறது' என்றேன்.

'கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை உங்களுக்கு சரியாகிவிடும்' என்று சொல்லி அவர் படுத்துக் கொண்டிருந்த என் காலருகே வந்து என் வலக் கால் கட்டை விரலைப் பிடித்துக் காலை ஆட்டினார். உடனே என்ன ஆச்சரியம்! எனக்குச் சிறுநீர் பிரிய ஆரம்பித்து வேதனையெல்லாம் ஒரு நொடியில் மறைந்து உடல் காற்றில் பறப்பது போல் லேசாகி விட்டது. உடனே என்னை அறியாமல் ஆழ்ந்து உறங்கி விட்டேன். இன்று காலை எழுந்த போது எனக்கு வலியின் சுவடே இருக்கவில்லை. என் புண் கூட ஆறிவிட்டது. வந்தவர் யார் டாக்டர்?



அவரைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன் நான் அவருக்கு என் ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவிக்க வேண்டும்' என்றார் குரல் தழுதழுக்க.

'நர்ஸ், நீங்கள் போய் நம் ஆஸ்பத்திரியிலிருக்கும் எல்லா டாக்டர்களையும் வரச் சொல்லுங்களேன்' என்று உத்தரவிட்டார். நடராஜன் எல்லோரையும் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். 'டாக்டர், இதில் யாருமே இல்லை. வந்தவர் மெல்லிய உடல்வாகு கொண்டவர், மாநிறமாக இருந்தார். அவருக்கு நீண்ட தலைமுடியும், நீண்ட தாடியும் இருந்தது. மிகச் சாதாரணமாக ஒரு வேஷ்டி மட்டும் அணிந்திருந்தார். அதன் நுனியை மேலே எடுத்து தம் தோள்களை மூடிப் போர்த்தியிருந்தார்'.

இந்த விவரங்களைக் கேட்ட ரவீந்திரனுக்கு லேசாகச் சந்தேகம் தட்டியது. ஸ்ரீ அரவிந்தரின் பலவிதமான போட்டோக்களை எடுத்து 'நீங்கள் பார்த்தவரில் யாராவது ஒருவர் இந்த போட்டோவில் இருப்பது போல் இருந்தாரா?' என்று கேட்டார். ஒவ்வொரு போட்டோவாகப் பார்த்துக்கொண்டே வந்தவர் சட்டென்று பகவானின் பழைய போட்டோ ஒன்றைப் பார்த்து களிப்புடன் 'இதோ இவர்தான், இவர்தான். யார் டாக்டர் இவர்? இவரை நான் சந்திக்க வேண்டுமே, இவரைக் கூப்பிடுங்களேன்' என்றார் ஆர்வத்துடன்.

'இவர்தான் என் குருநாதர். இவருடைய சமாதி தரிசனத்திற்காகத் தான் உங்களை அந்த மோசமான நிலையிலும் விட்டுப்போயிருந்தேன். அவரை நான் எப்படி அழைக்க முடியும்? அவர் பூதவுடலை நீத்துப் பல வருடங்கள் ஆகின்றன'.

உடனே நடராஜன் மிகுந்த பவ்யத்தோடும், பக்தியோடும் 'டாக்டர் நானும் இவரை வணங்க விரும்புகிறேன். எனக்கு இவருடைய படம் ஒன்று கொடுப்பீர்களா?' என்று கேட்டார். அவர் கோரிக்கைக்கு உடனே செவிசாய்த்த டாக்டர் நேராகத் தம் அறைக்குச் சென்று பகவானின் படத்தின் கீழ் நமஸ்கரித்து 'பிரபோ எனக்குக் கெட்ட பெயர் வராமலி ருக்க தாங்கள் பூத உடலில் வந்து வைத்தியம் செய்தீர்களோ? உங்கள் கருணைக்கு எல்லையேது?' என்று இரு கரம் கூப்பி கண்ணீர் மல்க வணங்கினார்.

❊ ❊ ❊

# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - வாழ்க்கையிலேயே அப்படித்தானே. ஒரு வித்தியாசம். இதற்கெல்லாம் வாழ்க்கையில் வழியில்லை. அன்னையிடம் வழியிருக்கிறது. அதுதான் விசேஷம். அன்னையை அனைவருக்கும் அறிமுகப்படுத்த நினைப்பது சரியா?

அண்ணன் - எதையும் செய்யும் மனநிலை சரியாக இருந்தால் செய்யலாம். ஆசைப்பட்டுச் செய்தால் தவறாகிவிடும். அன்னையைப் பின்பற்றுவதே கஷ்டம். பிறருக்கு அறிமுகப்படுத்த முடியாது. அவர்களே தயாராக இல்லாமல் நாமே சொல்ல முடியாது. நீ நினைப்பதைப் போல் ஒரு பெரிய காரியம் நடந்துவிட்டால் அனைவரும் நம்புவார்கள் என்பது சரியில்லை.

தம்பி - கண்ணால் பார்த்தபின் ஏன் நம்பமுடிவதில்லை? என்னாலும் முடியவில்லையே.

அண்ணன் - இந்த விளக்கம் எல்லாம் சொல்லலாம். செய்வது சிரமம். மனிதன் நல்லது என்பதால் மட்டும் செய்யமாட்டான். இலாபமிருக்கிறதா என்று கேட்பான். இலாபமிருந்தால் மட்டும் செய்வான் என நிலையில்லை. மரியாதை வேண்டும் என்பான். மரியாதை வருவதால் மட்டும் செய்யமாட்டான். செய்யாவிட்டால் உள்ள மரியாதை போய்விடும் என்றால் செய்வான்.

தம்பி - அதுதான் பக்குவமோ?

அண்ணன் - ஆத்மீகப் பக்குவம் பெற சமூகப்பக்குவம் வேண்டும் போலிருக்கிறது. **The social man needs social sanction to accept spiritual grace**. சமூகம் முழுவதும் பக்குவப்பட்டால்தான் ஒருவர் முன்வருவார்.



தம்பி - நாமே கொடுக்க முயன்றால் ஏன் முடியவில்லை என இப்பொழுது புரிகிறது. சரி பக்குவத்தைப்பற்றிச் சொல் லுங்கள். நான் என் வரையில் செய்துபார்க்கிறேன்.

அண்ணன் - பிறருக்குச் சொல்ல வேண்டும் என்ற ஓர் இடம் தவிர உனக்குப் பக்குவம் உண்டு. நமக்கு நினைப்பவை பல நடக்கின்றன. பல நடப்பதில்லை. ஒன்று தவறாமல் நடந்தால் பக்குவம் வந்ததாக அர்த்தம்.

தம்பி - கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தக் கூடாதா?

அண்ணன் - விஷயமில்லாவிட்டால் ஓரளவு வந்து நின்றுவிடும். அப்புறம் நகராது.

தம்பி - இந்த விஷயம் அப்படித்தானே நிற்கிறது.

அண்ணன் - பணம்தான் சுலபம். எந்தத் தொகை வேண்டுமானாலும், அதைப்பெறும் தகுதியை மனதால் பெற்றுவிட்டால் அது வந்துவிடும்.

தம்பி - பெரும் பணக்காரனுக்கெல்லாம் அத்தகுதியிருக்கிறதா?

அண்ணன் - அது வேறே பணம். பெட்டிக்கடைக்காரன் மாதம் 25,000 சம்பாதிப்பதும், கலைக்டர் 25,000 சம்பாதிப் பதும் ஒன்றாகுமா? அன்பர் சம்பாதிப்பதானால் அவர் நல்லவராக இருக்க வேண்டும். ஏராளமாகப் பணம் சம்பாதித்தவர்கள், பணமே குறியாக இருப்பார்கள். முக்கியமாக அவர்களுடைய கட்டுப்பாட்டிலுள்ள எவரை யும் சம்பாதிக்க அனுமதிக்க மாட்டார்கள். தாம் சம்பாதிப் பதைவிட பிறர் சம்பாதிக்கக்கூடாது என்பதே பணக்காரன் கொள்கை. அன்பர் சம்பாதிக்க அனை வரும் சம்பாதிக்க வேண்டும் என்ற மனப்பான்மை வேண்டும். இது கஷ்டம். இப்படி நினைத்தால்,

அன்பருடனுள்ள எவர் மனமும் அன்பர் சம்பாதிக்க அனுமதிக்காது. அதை மீறிப் பணம் சம்பாதிக்க சாதாரணமாக முடியாது.

தம்பி – அப்படியானால், முடியாது என்றுதான் அர்த்தமோ?

அண்ணன் – முடியாது, வெகு சிரமம் என்று பொருளன்று. இன்றில்லாதது எனப் பொருள்.

ஏதோ முடியாததைக் கேட்கிறோம் என்று நினைப்பது வழக்கம். சைக்கிள் புதியதாக வந்தபொழுது அதை விடுவதை ஒரு வித்தையாக நினைத்தார்கள். இன்று அனைவரும் எளிதாக, சைக்கிள் விடுகிறார்கள். உலகம் மாறி அன்னையை அனைவரும் ஏற்றுக்கொண்டால், இன்று பகீரதப் பிரயத்தனம் அன்று எளிதாகத் தோன்றும்.

ஒரு கோடி பணம் வேண்டுமானால், அப்பணத்தைப் பெறும் தகுதியை மனத்தால் பெற்றபின் எந்தத் தொழிலைச் செய்தாலும், அத்தொகை வெகு விரைவில் அன்பரை நாடிவரும் என்பது ஆன்மீக உண்மை. இதை எடுத்துரைப்பது எளிதன்று. செய்து காண்பித்தாலும் நம்பிக்கை ஏற்படாது.

தம்பி – முக்கிய அம்சங்களை மட்டும் சொல்லுங்கள்.

அண்ணன் – பணத்திற்கும், மற்ற எந்தக் காரியத்தைச் செய்யவும் தகுதி ஒன்றே.

தம்பி – பணத்திற்கு மட்டும் சொல்லுங்கள்.

அண்ணன் – 1) தொகைக்குரிய தகுதியை மனம் பெற வேண்டும்.
2) முக்கியமானது ஒன்றுண்டு. இதே தொகையை அடுத்தவர் பெற்றால் மனம் நாம் பெற்றதுபோல் மகிழ வேண்டும்.
3) தகுதி என்றால் நிதானம், பொறுமை, தொழிலுக்குரிய அறிவு.



தம்பி – இவை எளிமையாகத் தோன்றுகின்றனவே. 2ஆம் நிபந்தனையில் ஏராளமான பேர் அடிபட்டுவிடுவார்கள். அது நமக்குக் கவலையில்லை. மற்றவை எளிமையாகத் தோன்றுகின்றனவே.

அண்ணன் – நீ சொல்வது உண்மை. உனக்குப் பலிக்காததற்கு வேறு ஒரு காரணம் உண்டு. நீ தகுதியற்றவர் பெற வேண்டும், நாதனுக்கு வேண்டும் என நினைப்பாய். நாதன் சோம்பேறி, பொறாமைக்காரன். அது பலிக்காது. அந்த எண்ணம் விலக்கப்பட்டால் உனக்குப் பலிக்கும். 1 கோடிக்கும், 100 கோடிக்கும் சட்டம் ஒன்றே.

தம்பி – அன்னை அருளால் பொறாமைக்காரர், சுயநலமி பெறுவதைக் கண்டுள்ளேன். அது எப்படி?

அண்ணன் – உழைப்புக்குப் பலனுண்டு. உழைப்புள்ளவனுக்கு அருள் துணைசெய்யும். பொறாமையை மீறி துணை செய்யும்.

தம்பி – சுயநலம், பொறாமையை விடுவோம். மனம் தகுதி பெற்றால் பலனுண்டு எனில் சுலபமாகத் தெரிகிறதே. சிலர் வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்ப்போம். எஸ்டேட் மானேஜர் பேர் உழைப்பாளியாயிற்றே. ஏன் அவருக்குப் பலிக்கவில்லை.

அண்ணன் – 1 லட்ச ரூபாய்க்கு வாங்கிய எஸ்டேட் 10 கோடி விலைக்கு உயர்ந்தது. உழைப்புக்குப் பெரும்பலன் உண்டாயிற்று.

தம்பி – அவருக்கு வரவில்லையே.

அண்ணன் – அருள் உழைப்புக்குப் பலனைக் கொடுத்துவிட்டது. அவர் அன்னையை ஏற்றுக்கொண்டு கர்வத்தைக் கரைத்திருந்தால் அவருக்கே பலிக்கும். அவர்

தகப்பனார் பிறர் சம்பளத்தில் கமிஷன் பெற்ற கங்காணி. அதனால் இவர் உழைப்பின் பலன் அடுத்தவருக்குப் போயிற்று.

தம்பி - இவருக்கு அன்னையைப் பிடிக்கவில்லை. போய்விட்டார் அல்லவா! நீங்கள் சொல்வதுபோல் நல்லவர் ஒருவர் நினைவுக்கு வரவில்லை. கடத்தல், கள்ளமார்க்கட் காரர்கள்தான் நினைவு வருகிறது.

அண்ணன் - இதில் ஒரு ரகஸ்யம் உண்டு. நல்லவர் வந்தால் அவருக்கு ஏராளமாக பணம் வருகிறது. உடனே அன்னையைவிட்டுப் போய்விடுகிறார்கள். ஏனென்றால், அவ்வளவுதான் நல்லது இருந்தது போலும்!

தொடரும்

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கிடைக்காத உரிமையை நினைத்து மனம் ஏங்கும் பொழுது, அன்னையை நோக்கிச் செல்லும் உயர்ந்த உரிமை காத்திருப்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**
**Editor: Karmayogi**

# சம்பளமில்லாத பெரிய வேலை

ஒரு கம்பனியில் 3000 ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்தவர் திறமைசாலி. கம்பனி அவரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைத்திருந்தது. அவர் அன்னையை அறிந்தார், உடனே நண்பர் ஒருவர் புதுக் கம்பனி ஆரம்பிக்க விரும்பி அன்பர் உதவியை நாடினார். அதிகச் சம்பளம் தருவதாகச் சொன்னார். பழைய வேலையைவிட்டு அன்பர் புது வேலையை ஒத்துக் கொண்டார். முதல் மாதம் சம்பளம் வந்தது, அதுவே முடிவான சம்பளம். மையம் வந்து தம் நிலையைக் கூறினார்.

‘‘உங்களை நம்பியுள்ள கம்பனியை விட்டு வந்தது தவறு என்றுணர்ந்து செய்யும் பிரார்த்தனை பலிக்கும்’’ என்று கேள்விப்பட்டார். நடந்தவற்றை மனதில் கொண்டுவந்து பார்த்தார், தவற்றை உணர்ந்தார், மன மாற்றம், இடைவிடாது அன்னையை நாடியது. பலன் கிடைத்தது.

* பழைய கம்பெனி அழைத்தது.
* 6000 ரூபாய் சம்பளம் கொடுத்தது.

அன்னையை ஏற்றபின் தவறு நடக்காது.

* நடந்தால், மனம் மாறினால் தவறு விலகும், அல்லது பெரியது நடக்கும்.
* நாமே மனத்தளவில் தவற்றுக்கு இடம் தாராவிட்டால் அன்பர்க்குத் தவறு இல்லை.

பொதுவாக அன்பர்கள் தவறு செய்யுமிடம் ஒன்று : தவறான மனமுடையவரை, அவர் நல்ல பழக்கத்தால், நல்லவர் என நினைத்து ஏமாறுவது, அது பெரிய தவற்றுக்குரிய பலனைத் தரும்.

# வரி

அன்னை பக்தர் அயல்நாடு போய் திரும்பும்பொழுது வாங்கிவரும் பரிசுப் பொருட்களுக்கு வரி கட்டப் பிரியப்படவில்லை. அடுத்த பக்தர் தெரிந்த அதிகாரியிடம் சொல்லியதால், பெட்டிகளைச் சோதனை செய்யாமல் அனுப்பிவிட்டனர். இதை ‘அருள்’ எனப் பேசுவது சரியில்லை. கட்ட வேண்டிய வரியைக் கட்டும் மனப்பான்மை வேண்டும். சிபார்சு வந்தால் ஏற்கக்கூடாது, அதுவே முறை. அந்நிலையில் அருள் எப்படிச் செயல்படுகிறதோ அதை ஏற்பதே சமர்ப்பணமான மனநிலை.

‘‘நான் பக்தன் என்பதால், அன்னை அருள் எனக்கு வேண்டியவர்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதிகாரியை நான் அறிவதே அருளன்றோ?’’ என்று நினைப்பது, பேசுவது தர்க்கத்திற் குரிய வாதமல்ல, குதர்க்கமாகும். ஆதாய மனப்பான்மைக்கு அருளைத் துணை தேடுவது அருளன்று, மருள்.

அதே அன்பர் அடுத்தமுறை வெளிநாடு சென்றார். குதர்க்கத்தை மனம் விட முடிவு செய்தது. பரிசு வாங்க மீண்டும் முடிவு செய்தார். அதற்குரிய வரிப்பணத்தையும் தயாராக முதலிலேயே எடுத்து வைத்துவிட்டார். மனம் தயாராகிவிட்டது. ஊர் திரும்பினார். வரி கட்டுமிடத்திற்கு வந்தார். Q வரிசையில் இவரே கடைசி. ஆபீஸர் இவர் பெயரை விசாரித்தார். பெட்டியைத் திறக்கச் சொல்லவில்லை. நீங்கள் போகலாம் என்றார்!

* சட்டத்தை ஏற்பது சட்டம்.
* வரியைக் கட்டும் மனப்பான்மை சரியான மனப்பான்மை.
* சட்டத்தை ஏற்பதை விட, வரியைக் கட்டுவதை விட அன்னை முடிவை ஏற்பது சரி.
* சட்டமும், வரியும் அன்னையை அடைய உதவும் கருவிகள்.
* அன்னையே முடிவு.